TNEB
எம்ப்ளாயீஸ்
பெடரேஷன் நியூஸ்

மலர்- 4 ✧ இதழ்-8 ✧ ஏப்ரல் 2022

நிர்வாக ஆசிரியர்

அ. சேக்கிழார்

ஆசிரியர் குழு

சு. மணிகண்டன்
J.L. பாஸ்டின் ராஜ்
S. இராமநாதன்
K. செல்வராஜூ
R. ஜெயராமன்
வீ. பாரதி

செயலாளர் (வெளியீடு)

A. செந்தில்குமார்



39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.
✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com


# மே தின நல்வாழ்த்துகள்

**உ**ழைக்கும் தொழிலாளி வர்க்கத்தின் உன்னத நாளாம் மே தின நினைவு கூட்டங்களும், ஊர்வலங்களும் நடத்தி பெருமைகளை போற்றியது எதிர்வரும் காலங்களில் என்ன ஆகுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

8 மணி நேர வேலை 8 மணி நேரம் ஓய்வு 8 மணி நேரம் உறக்கம் என்பதெல்லாம் இன்றைய காலத்தில் சமாதியாக்கப்பட்டிருக்கிறது.

தனியார்துறையில் 8 மணி நேரத்திற்கு மேல் வேலை வாங்குவது என்பது மட்டுமல்ல மின்துறை போன்ற பொதுத்துறை நிறுவனங்களிலும் அந்தக் கேடு தொடர்கின்றது.

50%க்கு மேலாக ஆள்பற்றாக்குறையோடு 24 மணி நேரமும் உழைப்பை சுரண்டும் நிலையும், உயிரைப் பறிக்கும் நிலையும் மேலும் தொடர அனுமதிக்க வேண்டுமா என்று சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தனியார் துறைகளிலிருந்த நிறுவனங்களெல்லாம் பொதுத்துறை நிறுவனங்களாக மாற்றிய காலம் அன்று.

இன்றோ அனைத்தையும் தனியராக்கும் நிலை- பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று தேசத்தை வழிநடத்த புதிய தலைமுறைகள் பிறந்துள்ளன. இது தேசத்தின் வளர்ச்சிக்கு ஒரு போதும் உதவாது.

மின்சார வாரியத்தின் போக்கு மீண்டும் பழைய நிலைக்கு திரும்புகிறது. அதிரடியான உத்தரவுகள், மாற்றங்கள், எங்களைக் கேட்க யாரும் இல்லை என்று எண்ணுகிற அளவிற்கு அரசாங்கத்தின் கைகளுக்கு மின்சார வாரியத்தைக் கொண்டு செல்ல முயற்சிகள் ஒவ்வொன்றாக நடைபெறுகிறது.

சாதாரணமாக போனஸ் பேச்சுவார்த்தை நடத்துவதை கடந்த சில ஆண்டுகளாக தவிர்த்து வரும் நிலை.

1.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கிட வேண்டியது உள்ளது என்பதையே காதில் போட்டுக் கொள்ளும் நிலை வாரியத்தில் இல்லை.

எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வேன் என்பதும் அரசாங்கம் இதைத்தான் சொல்கிறது என்றும் வாரியத்திற்குட் பட்டவைகள் கூட அரசாங்க ஒப்புதலுக்கு செல்ல வேண்டும் என்று கோர்ப்புகளை அனுப்ப முனைந்திருப்பது இதற்கெல்லாம் உதாரணமாக அமைந்திருக்கிறது.

DA அரசு வழங்கும்போது நமக்கு வழங்கிட ஒப்பந்தம் உள்ளது. ஆனால், இன்று DA கொடுக்கலாமா என கோர்ப்பு அரசாங்கத்திற்கு போகிறது.

மின்சார வாரியமே நியமனம் செய்த நிலை இன்று TNPSC வழியாக தேர்வு நடத்துவதாம். உள்முகத் தேர்வை ஒழிக்க மறைமுக நடவடிக்கை எடுக்கிறது வாரியம்.

**எல்லாவற்றிற்கும் மேலாக 12.04.2022ல் வெளியாகி உள்ள (Per) FB TANGEDCO Proceedings No. 2 என்பது வாரியம் முற்றிலும் திரும்ப பெற்றிட வேண்டிய உத்தரவு என்பதை மீண்டும் தொழிலாளர்களின் ஒற்றுமை மூலம் நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்றாகியுள்ளது.**

**இன்றைய வாரியத்தின் போக்கை எதிர்த்து போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு நடத்தி நமது உரிமைகளை பாதுகாக்க நமக்கான வேலை நிறுத்தத்தை முன்னெடுப்பதே மே தின அறைகூவலாகட்டும்.**

சிகாகோ நகரின் போராட்டத்தை நினைவு கூர்வோம். சிங்காரவேலர் நடத்திய மே தினத்தை நினைவு கூர்வோம்.

**- ஆசிரியர்**

# நமது கோரிக்கைகளை வென்றெடுக்க, மின்வாரியத்தைப் பாதுகாக்க, மக்களுக்கு சிறந்த சேவை செய்ய உடலை வருத்தி உண்ணாவிரதமிருந்து ஆர்ப்பாட்டமா? ஒட்டு மொத்தமாக பணியை புறக்கணித்து வேலை நிறுத்தமா?

**அனைவருக்கும் வணக்கம்!**

1957ல் மின்சார வாரியமாக உருவாக்கப்பட்டு உற்பத்தியில் விநியோகத்தில் மிகப் பெரிய இலக்கினை எட்டியும், தொழிலாளர் நலனில் அக்கறை கொண்டும், மக்கள் சேவையில் சிறந்தும் விளங்கிய மின்சார வாரியம் 2010 முதல் TNEB Ltd, TANGEDCO, TANTRANSCO என்று கம்பெனிகளாக்கப்பட்டு இயக்கி வருவதை அறிவோம்.

இன்றைய நிலவரப்படி 3 கோடிக்கு மேல் மின்நுகர்வோர்கள் உள்ள இந்நிறுவனத்தில் லட்சத்திற்கு மேற்பட்டோர் பணியாற்ற வேண்டிய இடத்தில் 50% அளவில் கூட தொழிலாளர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் இல்லாத நிலை உள்ளது.

களப்பணி காலியிடங்கள் அதிகமாக உள்ளதால் அதிகமான பணிச்சுமையினால் தொழிலாளர்கள் மனச் சோர்வுறுகிறார்கள். விபத்துகள் அதிகமாகிறது, உயிரிழப்பு தொடர் கதையாகிறது, கேங்மேனிலிருந்து முகவர் வரை விபத்தும் உயிரிழப்பும் வேதனையை அளிக்கக் கூடிய ஒன்றாக உள்ளது.

பிரிவு அலுவலகங்களுக்கு பொறியாளர்கள் இல்லாத நிலை ஒன்றிரண்டு அலுவலகப் பணிகள் கூடுதலாக செய்ய வேண்டிய நிர்பந்தம் பொறியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

கணக்கீட்டு பிரிவில் பணியாளர்கள் பற்றாக்குறை பதவி உயர்வில் சென்றால் கூட ஏற்கனவே பார்த்த பணியை வேலை பார்க்க வேண்டிய அவலம் உள்ளது. குறிப்பாக கணக்கீட்டு பிரிவில் எந்த பதவியில் இருந்தால் கணக்கீட்டு பணிக்கு செல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது.

நிர்வாகம், கணக்கு மற்றும் தணிக்கைப் பிரிவுகளில் பணியாளர்கள் பற்றாக்குறையினால் பணிகளில் தாமதம், கணினி கிடையாது மற்றும் காகிதமும் (A4 Sheet) கிடையாது.

1.12.2019 முதல் ஊதிய உயர்வும் கிடையாது. கொரோனா காலத்தில் உழைத்து மடிந்தவர்களுக்கு நிவாரணமும் கிடையாது.

உள்முகத் தேர்வு இல்லை, பதவி உயர்வும் இல்லை, செய் அல்லது செத்து மடி என்பது போல உத்தரவுகள் தாராளமாய் பறக்கிறது. மின்னல் வேகத்தில் மின்னகத்தின் செயல்பாடு என பெருமை பேசப்படுகிறது.

தினசரி எத்தனை தொழிலாளி விபத்தில் இறந்து போகிறான் என்பது இருட்டிப்பு செய்யப்படுவது நியாயமா? விபத்தில் பலியாகும் தொழிலாளியின் குடும்பத்தினருக்கு நிவாரணம் மற்றும் வாரிசு வேலை உடனே வழங்க வேண்டாமா? வாரிசு வேலைக்கு விண்ணப்பிக்கப்பட்ட நிராகரிக்கப்பட்ட விண்ணப் பங்களை மறு பரிசீலனை செய்து, உழைத்தவரின் குடும்பத்தினருக்கு வேலை வழங்க வேண்டமா?

ஒப்பந்த தொழிலாளர்கள் பணி நிரந்தரம் என்று கேட்டால், வழக்கறிஞருக்கு வாதாட பணம் ஒதுக்கீடு செய்து, பதவி நீட்டிக்கப்படுகிறது!

---


தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

**TAMILNADU ELECTRICITY BOARD EMPLOYEES' FEDERATION**

பதிவு எண் : 3600 / CNI

எண். 39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002. ✆ : 9841446621

பகுதி நேரப் பணியாளர்கள் 1000 பேருக்குமேல் ஊதியமின்றி உழைக்கிறார்கள். நியமனம் கேட்டால் இன்று வரை நீதி கிட்டவில்லை.

கேங் மேன் பணியாளர்களுக்கு பயிற்சி காலத்தைக் குறைத்து அடிப்படை ஊதியம் வழங்க வேண்டாமா? ஊர் விட்டு ஊர் செல்வதுப் போல், மாவட்டம் தாண்டி வேறு மாவட்டத்தில் பணி அமர்த்தினால் மாறுதல் உத்தரவு வழங்க வேண்டாமா? விடுப்பு உட்பட அனைத்து சலுகை களுக்குமான உத்தரவு எப்போது வரும்?

புதிய ஓய்வூதியம் ரத்தாகும் என்ற வாக்குறுதியை அரசாங்கம் நிறைவேற்றுமா?

லட்சக்கணக்கான கோடி கடன் உள்ளதாக செய்திகள் அறிவிப்பு! சேவைத்துறையில் லாப நட்டத்தைப் பார்க்கலாமா? நட்டம் வர என்ன காரணம்! யார் காரணம்! தீர்வு என்ன! யார் முடிவெடுப்பது!

நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு பங்கில்லையா? தொழிலாளர் நலன் பேணுவதில் அக்கறை காட்டாதது முறையா?

ஆய்வுக் கூட்டங்கள் மட்டும் ஆபத்பாந்தவனாக ஆகி விடுமா? அறிவிப்புகள் ஊடகத்தில் வந்தால் போதுமா?

தலைமை பொறியாளர் (பணியமைப்பு) பதவி எப்பொழுது நிரப்பப்படுமோ?

தேர்வு செய்த 5000 கேங்க்மேன்களுக்கு பணி நியமனம் வழங்கிட ஏன் தாமதம்! ஆள் பற்றாக்குறையில் மின்வாரியப் பணி பாதிக்கப்படவில்லையா?

எத்தனை முறை பேசினாலும் உத்தரவிட எங்கள் கையில் ஒன்றுமில்லை என்றால் யார் கையில் உள்ளது?

பேச்சுவார்த்தை என்ற பேராயுதத்தை தூக்கி எறிந்து விட்டு பேராபத்தை ஏற்படுத்த நினைப்பது சரியா?

களப்பிரிவா, கணக்கீட்டு பிரிவா, கணக்குப் பிரிவா, நிர்வாகப் பிரிவா, செயலகப் பிரிவா, தொழில்நுட்ப பிரிவா, தணிக்கை பிரிவா அல்லது பண்டகசாலை பிரிவா எந்த பிரிவானால் ஆள்பற்றாக்குறை? மனச்சோர்வுடன் குமுறிக் கொண்டு பணியாற்றும் நிலை என்று மாறும்!

மின்சார சட்ட திருத்த மசோதா 2021 தாக்கல் செய்வதிலிருந்து மின்வாரியத்தை காப்பாற்ற ஒரு பக்கத்தில் போராட்டம்! அதிக பணிச்சுமைகளால் பணியாளர் பணி செய்ய முடியாமல் மன அழுத்த போராட்டம் மறுபக்கம்! எந்த தீர்வும் கிடைக்காது எனில் ஏன் நடக்காது போராட்டம்?

தொழிலாளர் அலுவலர், பொறியாளர் யாவரும் ஒன்றிணைவோம்! போராடுவோம்!

**எதை மேற்கொள்வோம்! கருத்துகளை தாரீர்! கரம் கோர்ப்போம்! காலத்தில் முடிவெடுப்போம்.**

## தொழிலாளர், அலுவலர், பொறியாளர் நலனில் என்றும் அக்கறையுடன்

தமிழ்நாடு எலக்ட்ரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்

**TAMILNADU ELECTRICITY BOARD EMPLOYEES' FEDERATION**

பதிவு எண் : **3600 / CNI**

எண். 39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002. ✆ : 9841446621

## கருத்துக் கணிப்பு

| மின்சார வாரியத்தில் நமது கோரிக்கைகளை வென்றெடுக்க | **வேலை நிறுத்தம்** ❒ வேண்டுமா? ❒ வேண்டாமா? |
|---|---|

பெயர் :........................................................ பதவி : ...................................................

கோட்டம் : ................................................ வட்டம் : ...............................................

**வணக்கம் தோழர்களே!**

TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாநில செயற்குழுக் கூட்டம் 10.04.2022 ஞாயிற்றுக்கிழமை சென்னை-2 ஹோட்டல் சர்மனியில் (சத்திய மூர்த்தி பவன் எதிரில்) மாநிலத் தலைவர் தோழர் S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தலைமையுரையில் இயக்கரீதியான செயல்பாடுகளுக்கு நிர்வாகிகளும், உறுப்பினர்களும் அளித்துள்ள பங்களிப்பினைக் குறிப்பிட்டு பாராட்டினார்கள். 48 மணி நேர வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது குறித்து கருத்து தெரிவித்ததுடன் இரண்டாம் நாள் வேலை நிறுத்தம் போர்க்குணம் மிக்கதாக அமைந்திருந்ததும், தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய அவசியம் குறித்தும் உரையாற்றினார்.

பொதுச்செயலாளர் அறிக்கையில் கடந்த செயற்குழுவிற்கு பின்னர் நடைபெற்ற செயல்பாடுகளில் நிர்வாகிகள் சிறப்புடன் செயல்பட்டது, குறிப்பாக மார்ச் 14 கோரிக்கை விளக்க ஆர்ப்பாட்டம், மார்ச் 28, 29 வேலைநிறுத்தம் போன்றவைகளில் நமது செயல்பாடு பெரும் வரவேற்பினை பெற்றிருப்பதை குறிப்பிட்டும், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், கன்னியாகுமரி போன்ற கிளைகளின் புதுப்பித்தல் பணி சிறப்புடன் நிறைவு பெற பணியாற்றிய, நிர்வாகிகளுக்கும், புதிதாய் பொறுப்பேற்ற நிர்வாகிகளுக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தும், தொழில் மற்றும் தொழிலாளர்கள் பிரச்சினைகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகளின் செயல்பாடுகள் குறித்தும், மின்சார வாரியத்தில் கோரிக்கைகள் தொழிலாளர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படாமல் உள்ளதையும் இச்செயற்குழு தீவிர பரிசீலனைக்குட்படுத்தி அடுத்த கட்ட போராட்டத்திற்கு தயார்படுத்த வேண்டிய நிலைக்கு மின்சார வாரியம் நம்மை உள்ளாகியுள்ளதையும் குறிப்பிட்டும் பேசினார்.

மாநில செயல் தலைவர் உரையில் 2021ஐ விட அமைப்பு அசுர வேகத்தில் அடுத்த கட்ட செயல்பாடுகளுக்கு முன்னேறிக் கொண்டுள்ளதையும் நம்மிடமுள்ள ஒற்றுமையை மேலும் பலப்படுத்தி உறுப்பினர் எண்ணிக்கையை அதிகப்படுத்த சிறப்புடன் செயல்பட உறுப்பினர்கள் விவாதத்தில் கருத்துகளை முன்வைத்திட கேட்டுக் கொண்டார்.

மாநில அமைப்பு செயலாளர் கிளைகளின் செயல்பாடுகள் மேலும் அதிகரிக்க ஆலோசனைகளையும், புதிதாக தேர்வு செய்யப்பட்டு இச்செயற்குழுவில் கலந்து கொண்டுள்ள நிர்வாகிகளுக்கு வாழ்த்துரை தெரிவித்து வரவேற்றும், பிப்ரவரி, மார்ச் இரண்டு மாதமும் போராட்டங்களில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டது குறித்தும், அடுத்து நம் முன்னே உள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய முடிவுகள் எடுக்க வேண்டியது குறித்தும் உரையாற்றினார்.

வெளியீட்டு செயலாளர் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ் சந்தாதாரர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், பகுதிகளில் நடக்கக் கூடிய இயக்கம் சார்ந்த நிகழ்வுகளை செய்தியாக அனுப்பி வைத்திடவும் கேட்டுக் கொண்டார்.

மகளிரணி மாநில நிர்வாகிகள் உட்பட கலந்து கொண்ட செயற்குழு உறுப்பினர்களின் விவாதத்திற்கு பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## தீர்மானங்கள்

1) 10.04.2022 அதிகாலை உடுமலைப்பேட்டையில் நடைபெற்ற மின் விபத்தில் கேங்மேன் பலியானது குறித்து கவலையை தெரிவித்த செயற்குழு இதுபோன்ற நிகழ்வுகள் இனி தொடராத வண்ணம் சரியான விசாரணை நடத்திட வேண்டியும், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்கிடவும், மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

2) நாகப்பட்டினம் மின்வட்டத்தில் வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வு மறுஒதுக்கீடு உத்திரவினை உரிய நேரத்தில் வழங்காமல் காலந்தாழ்த்தி திரு. G. ராஜா சுதர்சன், திரு. N. குணசேகரன் ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை வேண்டுமென மேற்கொண்டு பதவி உயர்வில் செல்ல உள்நோக்கத்தோடு தடைவிதித்து செயல்பட்ட மயிலாடுதுறை கோட்ட அலுவலக செயல்பாடு குறித்து உரிய விசாரணை செய்திட மேற்பார்வை பொறியாளர் நாகப்பட்டினம் அவர்களுக்கு தகுந்த உத்திரவிடுமாறு மின்சார வாரியத்தை இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

3) 1. 5000 கேங்க்மேன் தேர்வு பெற்றவர்களை பணி நியமனம் செய்திடவும்,
2. புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்திடவும்,
3. ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்திடவும்,
4. பகுதி நேர பணியாளர்களை பணியமர்த்திடவும்,
5. 1.12.2019 முதல் வழங்கிட வேண்டிய ஊதிய உயர்வுக்கான பேச்சுவார்த்தை துவக்கவும்,
6. தலைமை பொறியாளர் (பணியமைப்பு) பதவிக்கு பொறியாளரை நியமித்திடவும்,
7. மின்வாரிய தலைமை மருத்துவமனைக்கு போதிய தொழில்நுட்ப பணியாளர்கள் நியமித்து சிகிச்சை அளித்திடவும்,
8. மதுரை மற்றும் தூத்துக்குடி மின்திட்டங்களில் களப்பணி உதவியாளர்களாக 20 வருடங்களுக்கு மேல் பதவி உயர்வு அளிக்கப்படாமல் உள்ள பெண் பணியாளர்களுக்கு பதவி உயர்வு உடன் அளித்திடவும் மின்சார வாரியத்தையும், தமிழக அரசையும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.
9. காலிப் பணியிடங்கள் அடிப்படை பதவிகள் TA, JA, Assr, AE, Assistant Draughtsman போன்ற பதவிகளை மின்சார வாரியமே நேரடி தேர்வு செய்திடவும் மின்சார வாரியம், தமிழக அரசையும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4) தொழில்நுட்ப உதவியாளரிடமிருந்து இளநிலை பொறியாளர் IIம் நிலை (TA to JE 2nd Grade (Electrical) (மின்னியல்) பதவிக்கு தகுதிக்காண் பட்டியல் வெளியிட்டு கோரப்பட்டுள்ளதில் குறும் தேததியில் (Crucial Date) மூன்று வருடம் பணி முடித்தவர்கள் இல்லாத காரணத்தால் தேதியில் மாற்றம் செய்து இரண்டு வருடம் பணி முடித்தவர்களுக்கும் பதவி உயர்வு அளித்திட வேண்டுமென இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

5) பட்டயம் இல்லாத (Non-Diploma) இளநிலை பொறியாளர் IIம் நிலை பதவி உயர்வு களப்பணியில் உள்ளவர்களை தேர்வு செய்யும் விகிதத்தில் 3:1 என்பதை ஒரு முறை தளர்த்தி தகுதியுடைய அனைவரையும் இளநிலை பொறியாளர் IIம் நிலை (மின்னியல்) தேர்வு செய்து காலியாக உள்ள பதவிகளில் பணியமர்த்தி துணை மின்நிலைய பணிகள் செம்மையாக நடத்திட நடவடிக்கை எடுக்க வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

6) Assistant Engineer, Technical Assisatant, Junior Assistant (Adm) உள்முகத் தேர்வினை விரைந்து நடத்திட இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

7) Junior Engineer II Grade (Mechanical) to Junior Engineer Ist Grade (Mechanical) பதவி உயர்வினை உடன் வழங்கிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

8) கேங்மேன் பணியாளர்களுடைய விடுப்பு மற்றும் சலுகைகளை உத்திரவினை உடனடியாக வெளியிட வேண்டுமென இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

9) கணக்கீட்டு பிரிவில் பிரிவு அலுவலகத்தில் இரண்டு கணக்கீட்டு பணியாளர்கள் கணக்கெடுக்கும் மற்றும் வசூல் பணிக்கு இருந்திடல் வேண்டும் என்ற வேலைப்பளு ஒப்பந்தத்தை மீறி வாரியம் முடிவெடுத்து வெளியிட்ட CFC/Rev/FC/AAO/Rev/Aug/ D.241/2022 Dt: 16.3.2022 உத்திரவினை நிறுத்தி வைக்குமாறு இச்செயற்குழு மின்சார வாரியத்தைக் கேட்டுக் கொள்கிறது.

10) மேற்கண்ட தீர்மானங்களுக்குரிய கோரிக்கைகளை பலமுறை வாரியத்துடன் பேசப்பட்டும் தீர்வு காணப்படாது உள்ளதால் முப்பது நாட்களுக்குள் வாரியம் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள தாமதப்படுத்தினால் தொழிலாளர்கள், அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களை திரட்டி பேரியக்கம் நடத்திடுவது அல்லது வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளோம் என்பதை வாரியத்தின் கவனத்திற்கு கொண்டு செல்வதுடன் தயாரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுமென இச்செயற்குழு ஏகமனதாக முடிவு செய்கிறது.

11) சென்னை மேற்கு மின்வட்டம் திரு. P. சரவணன் வணிக ஆய்வாளர் அவர்களை மாநில இணை செயலாளராக இச்செயற்குழு ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செயற்குழு முடிவுகளை நிறைவேற்ற தேவையான ஆலோசனைகளுடன் கூடிய தலைவர் முடிவுரையுடன் இச்செயற்குழு இனிதே நிறைவுற்றது.

நன்றி!

தோழமையுள்ள,

(A. சேக்கிழார்)

பொதுச்செயலாளர்



# வெற்றி நமதே

**ஆ. கண்ணாதுரை,**
மாநில துணைத் தலைவர் / TNEBEF
மேனாள் பொதுச்செயலாளர் வரைவாளர் சங்கம், கோவை

**ஒல்லும் வாயெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்**
**செல்லும் வாய் நோக்கிச் செயல் (குறள்: 673)**

இயலும் இடங்களில் எல்லாம் செயல் முடிப்பது நலம் தரும். இயலாத இடமாயின் அதற்கேற்ற வழியை அறிந்து அந்த செயலை முடிக்க வேண்டும்.

தொழிற்சங்க அமைப்பை வலுவாக்க இக்குறள் வழி நடக்கும் தலைமையின் ஓய்வற்ற உழைப்பால் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் முதன்மை பெற்று முன்னேறுகிறது.

மின்வாரிய அலுவலக வளாகங்களில் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சங்க அலுவலகம் ஒதுக்கீடு பெற்று திறப்பு விழா கண்டு வருகிறது.

1. மேட்டூர் 11.11.2018
2. திருச்சி 24.11.2018
3. உடுமலைப்பேட்டை 28.08.2019
4. கோயம்புத்தூர் 22.11.2019
5. திருநெல்வேலி 24.03.2022
6. விருதுநகர் 24.03.2022

தற்போது ஆறு கிளைகளில் உள்ளது என்ற நிலை வளர்ந்து அறுபதுக்கு மேற்பட்ட அனைத்துக் கிளைகளிலும் எம்ப்ளாயீஸ் பெடரேஷனுக்கு சங்க அலுவலகம் உள்ளது என்று உயர்த்திட உறுதி கொண்டு உழைப்போம்.

**திருநெல்வேலி**

திருநெல்வேலியில் சங்க அலுவலகம் தரக்கோரி தொடர் கடிதங்கள், நேரடி வேண்டுகோள் பலமுறை விடுத்தும் செவிமடுக்காமல் இருந்த நிலை மாறியது. வெற்றி கிட்டியது. மூத்த துணைத்தலைவர்கள் N. முத்தையா, K. சிவசுப்புபாண்டியன், நெல்லை மண்டல செயலாளர், S. ராமசந்திரன், கிளை செயலாளர் V. பாலசுப்ரமணியன், பொருளாளர் L.K. ரங்கநாதன், அமைப்பு செயலாளர் K. ராஜபாண்டி, மகளிரணி செயலாளர் திருமதி. E. ராஜசெல்வம் மற்றும் பொறுப்பாளர்களின் முன்னெடுப்பும், உழைப்பும், அணுகுமுறையுமே காரணம்.

தொழிற்சங்க கடமைகளை செவ்வனே செய்யும் அவர்களை பாராட்டுவோம். சங்க அலுவலகம் ஒதுக்கீடு செய்து வாழ்த்துரை வழங்கிய மேற்பார்வை பொறியாளர் திரு. S. ராஜன்ராஜ் B.E அவர்களுக்கு நன்றி கூறுவோம்.

திருநெல்வேலி மின்வாரிய வளாகத்தில் சிற்றுண்டிச் சாலையை ஒட்டினாற்போல நம் சங்க அலுவலகம் சீரும் சிறப்புமாக அமைந்துள்ளது.

24.03.2022 காலையில் திரளான உறுப்பினர் சூழ நம் மதிப்பிற்குரிய பொதுச்செயலாளர் திரு. அ. சேக்கிழார் அவர்கள் அலுவலக நுழைவாயில் முன்புறம் இரட்டை மின் கோபுரக் கொடியேற்றி பட்டொளி வீசி பறக்கச் செய்தார்.

சுமார் 10.30 மணியளவில் சங்க அலுவலக கட்டிட திறப்பு விழா, மாநிலத் தலைவர் திரு. S. மணிகண்டன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் முன்னிலையில் திருநெல்வேலி மண்டல தலைமைப் பொறியாளர் திரு. K. செல்வகுமார் ரிப்பன் வெட்டி திறந்து வைத்து மகிழ்வுடன் வாழ்த்தி பேசினார். திரு. S. ராஜன்ராஜ், மேற்பார்வை பொறியாளர் திறப்பு விழாவில் வாழ்த்துரை வழங்கினார். ''இரண்டு சுவர்களும், இடிந்த கூரையுமாக இருந்த இடத்தை நேர்த்தியான அலுவலகமாக எம்ப்ளாயீஸ் பெடரேஷன் மாற்றியுள்ளதை கண்டு மகிழ்ச்சி அளிக்கிறது'' என்று பாராட்டினார்.

திரு. P. செல்வராஜ், மேற்பார்வை பொறியாளர், மரபுசாரா எரிசக்தி, திரு. P. சுடலை, மாநிலத் தலைவர், தமிழ்நாடு மின்சார ஓய்வு பெற்ற தொழிலாளர் அசோசியேஷன், திருமதி. பார்வதி மோகன், மூலக்கரைப்பட்டி பேரூராட்சி தலைவர், திரு. சிவக்குமார் அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் & பொறியாளர் யூனியன் கலந்து கொண்டு சிறப்பித்து வாழ்த்திப் பேசினர்.

திரு. கருப்புசாமி, அண்ணா தொழிற்சங்க பேரவை கனீரென்ற குரலில் பாட்டுப்பாடி வாழ்த்தினார். திரு. இசக்கிப்பாண்டியன், பொறியாளர் சங்கம் தன் வாழ்த்துரையில் ''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் நீங்கள் சக்திவாய்ந்த (DYNAMIC) துணிவு, கனிவு மற்றும் பணிவு கொண்ட பொதுச்செயலாளரை பெற்றிருப்பது தான் காரணம். உங்கள் செயல்கள் சிறக்கும்'' என்றார். INTUC திரு. சார்லஸ், பொறியாளர் கழகம், தொழிலாளர் முன்னேற்ற சங்கம் மற்றும் அலுவலர்கள் வாழ்த்துரை வழங்கினர்.

தொழிற்சங்கம் மிகவும் அவசியம். தொழிலாளர்களுக்கு பிரச்சனைகள் மற்றும் பணிச்சுமை ஏற்படும்போது சிலவற்றை உடன் பணியாற்றுவோருடன் பகிர்ந்து கொள்ள முடியாது. அதற்கு தீர்வு காணும் இடம் சங்க அலுவலகம் என்று குறிப்பிட்டனர். மாநிலத் தலைவர் மற்றும் பொதுச்செயலாளர், இந்த விழா மிகவும் பெருமை மிக்கதாக அமைந்துள்ளது. அலுவலகத்தில் உள்ள அனைவரும் வந்து கலந்து கொண்டு சிறப்பித்துள்னர் என்று கூறி வாழ்த்தினார்.

மாநில பொருளாளர் திரு. J.L. பாஸ்டின்ராஜ், மாநில துணை தலைவர்கள் திருவாளர்கள் M. சுப்ரமணியம், N. முத்தையா, A. கண்ணாதுரை, K. சிவசுப்பு பாண்டியன், மாநில செயலாளர் NDS அலெக்சாண்டர், கிளை செயலாளர்கள் R. ராதாகிருஷ்ணன், விருதுநகர் V. அருண்ராஜ் NCES, சோமசுந்தரம், கன்யாகுமரி, மூத்த தொழிற்சங்க தலைவர் திரு. மீனாட்சி சுந்தரம் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

**விருதுநகர்**

திருநெல்வேலி அலுவலகத் திறப்பு விழா நிறைவுற்றதும் விருதுநகர் வந்தோம். 24.3.2022 மாலை 5.30 மணிளவில் விருதுநகர் மின்திட்ட மின்சார வாரிய வளாகத்தில் அழகுடன் அமையப் பெற்றிருந்த எம்ப்ளாயீஸ் பெடரேஷன் சங்க அலுவலகத் திறப்பு நடைபெற்றது. ராமமூர்த்தி சாலையில் பிரதான நுழைவாயில் வழியே முதலில் காண்பது நம் தொழிற்சங்க அலுவலகமே. ஒதுக்கீடு அளித்த மேற்பார்வை பொறியாளருக்கும், பராமரிப்பு பணிகள் செய்து மிளிரச் செய்த விருதுநகர் கிளைக்கும் நன்றி. உறுப்பினர் கூட்டத்தின் பலத்த கரவொலியுடன் பெருமதிப்பிற்குரிய பொதுச்செயலாளர் அ. சேக்கிழார் அவர்கள் ரிப்பன் வெட்டி திறப்பு விழா செய்தார்.

முன்னதாக தோழர் N. முத்தையா - மாநில உபதலைவர் எம்ப்ளாயீஸ் பெடரேஷன் கொடியை ஏற்றினார். தோழர் S. ராமச்சந்திரன், மண்டல செயலாளர் சங்க அறிவிப்பு பலகையை திறந்து வைத்தார். தோழர் J.L. பாஸ்டின்ராஜ், மாநில பொருளாளர் சங்க அலுவலக பலகையை திறந்தார்.

மாநிலத் தலைவர் மதிப்பிற்குரிய S. மணிகண்டன் அவர்கள் மின்சார வாரியத்தின் தொழிற்சங்க மாமேதை தொழிலாளர்களின் விடிவெள்ளி மறைந்த டாக்டர் S.C. கிருஷ்ணன் அவர்களின் படத்தை திறந்து வைத்தார். இனிப்புக்கள் வழங்கப்பட்டு அலுவலக திறப்பு விழா எழுச்சியுடன் நடைபெற்றது.

பின்னர் 28, 29.3.2022 அகில இந்திய வேலை நிறுத்த போராட்டம் மற்றும் பல்வேறு கோரிக்கைகளை விளக்கி விருதுநகர் அல்லம்பட்டி, JB ரெசிடென்சி கூட்ட அரங்கில் கிளைத் தலைவர் தோழர் S. இளங்கோவன் தலைமையில் நடைபெற்றது. மாநில உபதலைவர்கள் K. சிவசுப்பு பாண்டியன், K. ஞானகுரு, M. சுப்ரமணியம், A. கண்ணாதுரை, மாநில இணை செயலாளர் S.P. துரைப்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பொதுச்செயலாளர், மாநிலத் தலைவர், மாநில பொருளாளர் சிறப்புரையாற்றினர். சங்க திறப்பு விழா மற்றும் விளக்க கூட்டத்தை முன்னின்று வெற்றிகரமாக நடத்திய தோழர்கள் R. ராதாகிருஷ்ணன் கிளை செயலாளர், D. முனியாண்டி செயல்தலைவர் A. ஜான் ஆசீர்வாதம் அமைப்பு செயலாளர், G. பாலசுப்ரமணியன் பொருளாளர் ஆகியோரின் பணிகள் மற்ற கிளைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் வகையில் இருந்தது.

அடுத்த நாள் காலையில் (25.3.2022) இராமநாதபுரம் புறப்படும் முன் இந்தியாவின் தன்னிகரில்லா தலைவராக திகழ்ந்து வாழ்ந்து மறைந்த பெருந்தலைவர் பாரதரத்னா கு. காமராசர் அவர்களின் இல்லம் சென்று சிலைக்கு மரியாதை செலுத்தி வணங்கினோம்.

**இராமநாதபுரம்**

இராமநாதபுரம் மின் திட்ட கிளையை வலுவுடன் உருவாக்க மாநில தலைவர் மற்றும் பொதுச்செயலாளரின் தொடர் முயற்சியின் பலன் 25.03.2022 நடந்தது.

இராமநாதபுரம் மின்திட்டத்தில் பணிபுரியும் கேங்மேன் தோழர்கள் தேனி மாவட்ட பகுதியில் இருந்து வந்துள்ளனர். மாநில செயலாளர் திரு. R. மூக்கையா, மண்டல செயலாளர் திரு. K.R. சுப்ரமணியன், தேனி வட்ட கிளை பொருளாளர் திரு. R. காமராசன், சின்னமனூர் கோட்ட செயலாளர் திரு. முத்து முருகன் ஆகியோர் குழுவாக தொழிற்சங்க பணியை முன்னெடுத்தனர். ‘‘நீ ஓய்வு எடுக்கும் நேரம் உனக்கு இதமானது. உன் எதிரிக்கு வலிமையானது. இது தோல்வி என்ற எதிரிக்கும் பொருந்தும்’’ என்ற உண்மையை அவர்கள் அறிந்தவர்கள்.

இராமநாதபுரம் வட்டக்கிளை பொருளாளர் திரு. S. பால்ராஜ் உடன் ராமேஸ்வரம், மண்டபம், உச்சிப்புளி, ராமநாதபுரம் கிராமியம், தெற்கு, வடக்கு, தேவிபட்டினம், R.S. மங்கலம், தொண்டி ஆகிய பகுதிகளுக்கு சென்று உறுப்பினர் சேர்க்கையை உறுதிப்படுத்தினர். தொழிற்சங்க உணர்வுடன் தயாராக இருந்த ஐம்பதுக்கும் மேற்பட்டோர் எம்ப்ளாயீஸ் பெடரேஷனில் இணைத்துக் கொண்டனர்.

உறுப்பினர்கள் கூட்டம் புதிய பொறுப்பாளர்களை தேர்வு செய்ய 25.3.2022 மாலை 5.30 மணியளவில் ABC மைதீன் ஹால் "D" பிளாக்கில் பெருமதிப்பிற்குரிய S. மணிகண்டன் மாநில தலைவர் தலைமையில் நடைபெற்றது. பொதுச்செயலாளரின் உரையை உள்வாங்கி வேகம் பெற்றனர் எனலாம். வாடிய பயிருக்கு நீர்பாய்ச்சி, உரமிட்டு செழித்து வளரச் செய்யும் தேர்ந்த விவசாயியைப் போல பொதுச்செயலாளரின் நேர்மையான கருத்துமிக்க சொல்லாடல் இருந்தது.

மண்டபம் கேம்ப் பிரிவில் பணியாற்றும் இளைஞர் திரு. P. முத்து ராமலிங்கம், கேங்மேன், இராமநாதபுரம் மின்திட்ட கிளை செயலாளராகவும், கிளை பொறுப்பாளர்களும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். அனைவருக்கும் கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டது.

மிகப் பழமையான இராமநாதபுரம் மின்திட்ட கிளை சிறப்புடன் திகழ மாநிலப் பொருளாளர் திரு. J.L. பாஸ்டின்ராஜ் மற்றும் R. மூக்கையா, K.R. சுப்ரமணியன், A. கண்ணாதுரை, R. காமராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பொருளாளர் திரு. S. பால்ராஜ் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**வாழ்க எம்ப்ளாயீஸ் பெடரேஷன்! வெற்றி நமதே!!**




# பழைய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைக்கு வருமா?

நன்றி: **தினமலர்**

**ரா**ஜஸ்தானில் காங்கிரஸ் தலைமையிலான அரசு சமர்ப்பித்திருக்கும் நிதிநிலை அறிக்கையில், அரசு ஊழியர்களுக்குப் பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்தப் போவதாக அறிவித்திருப்பது, தமிழ்நாடு உள்ளிட்ட மற்ற மாநிலங்களிலும் அரசு ஊழியர்களிடத்தில் பலத்த எதிர்பார்ப்புகளை உருவாக்கியிருக்கிறது. தமிழ்நாட்டிலும் புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று மதிமுக பொதுச்செயலாளர் வைகோ, பாமக நிறுவனர் ராமதாஸ் உள்ளிட்ட தலைவர்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். கடந்த சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களின்போது திமுக வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்த வாக்குறுதிகளில் இதுவும் ஒன்று என்பதால், வரவிருக்கும் நிதியாண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இத்திட்ட அறிவிப்பு வெளியாகுமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

பழைய ஓய்வூதியத் திட்டத்தின்படி, ஓய்வு பெறும் ஊழியர்களுக்கும் அவர்களுக்குப் பிறகு குடும்பத்தினருக்கும் மாதாந்திர ஓய்வூதியமும் பணிக்கொடை போன்ற பயன்களும் அளிக்கப்பட்டன. 2004 ஏப்ரல் 1 முதல் நடைமுறைக்கு வந்த புதிய ஓய்வூதியத் திட்டத்தில் இந்தப் பயன்கள் நிறுத்தப்பட்டன. எந்தவொரு ஊழியருக்கும் சமூக, பொருளாதாரப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியம். முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய அரசுகளே அந்தப் பொறுப்புகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்வது, தனியார் துறையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்த முடியாத நிலையை எளிதில் உருவாக்கிவிடும்.

பெருந்தொற்று காரணமாக உருவான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் சூழலில், பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்துவது சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் தொய்வை ஏற்படுத்தாதா என்ற கேள்வி இயல்பானது. பழைய ஓய்வூதியத் திட்டத்தால் ஏற்படவிருக்கும் நிதிச் சுமையைத் தாம் தெளிவாகவே உணர்ந்துள்ளதாகவும் இதனால் சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் எந்தச் சுணக்கமும் ஏற்படாது என்றும் ராஜஸ்தான் முதல்வர் அசோக்கெலாட் தனது சமீபத்திய கட்டுரையில் தெரிவித்துள்ளார். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அரசுத் துறையில் பணியாற்றிய ஓர் ஊழியருக்கு அவரது ஓய்வுக் காலம் என்பது ஓய்வூதியத்தை நம்பியே இருக்க முடியும்; நல்லதொரு ஆட்சி நிர்வாகத்துக்குத் தன் வாழ்வின் பெரும் பகுதியை அளித்த ஊழியரின் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கத்தின் கடமை என்ற விளக்கத்தையும் அவர் அளித்துள்ளார்.

பழைய ஓய்வூதியத் திட்டம் மட்டுமின்றி, அடுத்து வரும் ஆண்டில் புதிதாக ஒரு லட்சம் அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்குவதாகவும் அசோக் கெலாட் அறிவித்துள்ளார். ஊரக வேலைவாய்ப்புத் திட்ட வேலை நாட்களை 125 ஆக உயர்த்தியிருப்பதோடு நகர்ப்புற வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்துக்கு ரூ. 800 கோடியும் ஒதுக்கியுள்ளார். தமிழ்நாட்டில் இத்திட்டத்துக்குக் கடந்த நிதிநிலை அறிக்கையில் ரூ. 100 கோடி ஒதுக்கப்பட்டு, பரீட்சார்த்த நிலையில் உள்ளது. அடுத்த ஆண்டின் இறுதியில் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால், ராஜஸ்தான் முதல்வர் இத்திட்டங்களை அறிவிப்பதில் அவசரம் காட்டியிருக்கலாம். தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல்களும் முடிந்துவிட்டதால், உடனடி அழுத்தங்கள் எதுவும் இல்லை என்றபோதும், ராஜஸ்தானின் நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டிலும் அதிர்வுகளை ஏற்படுத்தத் தவறவில்லை.

❐



# மெல்ல அழியும் மின் கிராமங்கள்

மேற்கு தொடர்ச்சி மலையின் பல்வேறு இடங்களில் அணைகளைக் கொண்டு நீர் மின் உற்பத்தி செய்யும் மலைக்கிராமங்கள்தான் இந்த மின்கிராமங்கள் இவை மின்வாரிய முகாம்கள் என்று அழைக்கப்படுவது உண்டு. இந்த முகாம்கள் மின் நிலையங்களில் பணியாற்றக் கூடிய பணியாளர்களுக்காக கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. மின்நிலைய உருவாக்கம் முதல் (Project) முகாம்கள் தோற்றுவிக்கப்பட்டன. இயற்கையின் கொடையை இரட்டிப்பாக்கி மனித வாழ்வின் மாண்புகளை சொல்லிக் கொடுத்தது இந்த மின்வாரிய முகாம்கள்தான். முகாம் வாசிகளுக்கு சொந்தங்கள் இரண்டாம் பட்சம்தான் முகாம் வாசிகளே சொந்தங்கள் இங்கு மாலையிட்டால் இந்துவாகவும், கிறிஸ்துமஸ் வந்தால் கிறிஸ்தவராகவும், ரம்ஜானுக்கு முஸ்லீமாக இருப்பவர்கள்தான் அதிகம். 1980க்கு முன்னால் எந்த ஒரு அடிபப்டை வசதியையும் பெற்றிடாத இந்த முகாம்கள் அதன் பிறகு ஓரளவு அடிப்படை வசதிகளையும் பெற்றன. தொலைக்காட்சி பெட்டி வந்தது என்னவோ 1985க்கு பிறகுதான் அதுவும் செயற்பொறியாளர் வீட்டில் மட்டும்தான் பிறகு வந்தது. மனமகிழ் மன்றங்களில், வெள்ளிக்கிழமை ஒலியும் ஒளியும் பார்க்க விழித்திருந்தது ஒரு காலம். அன்றாடத் தேவைக்காக ஆடு, மாடு வளர்ப்பது கட்டாயமானது. இலாப நோக்கில் செயல்பட முடியாது முகாம் வாசிகளுக்கு மட்டும்தான் பால் விற்பனை அதுவும் கூட்டுறவு பால் விற்பனை சங்கம் மூலமாக மனமகிழ் மன்றங்கள் பணியாளர்களின் உடற்சோர்வு மற்றும் மனச்சோர்விற்கு மருந்தாக இருந்தது. விளையாட்டு மைதானங்கள் எப்போதும் நிரம்பி இருக்கும். முகாம் மொத்தமும் மின்வாரிய பணியாளர்களின் குடும்பங்களால் நிறைந்திருக்கும். இது தவிர பள்ளிக்கூடம் ஆசிரியர்கள் கடை வைத்திருப்போர் வரை காவலர்கள் காவல்துறை போன்றவர்களுக்கு வடு உண்டு மின்நிலையம் உருவாகும் நேரத்தில் இருந்து இங்கு பணியாற்றி வரும் நபர்கள் இருந்ததால் பெரும்பாலான பணிகளை அவர்களே செய்து வந்தனர் (வருடாந்திர

பராமரிப்பு பணி உட்பட) அடுத்த வந்த தலைமுறைக்கும், தொழில்நுட்பத்தையும் அனுபவத்தின் செயல்பாட்டையும் கற்றுக் கொடுத்தனர்.

மின்நிலைய முகாம்களில் முகாம் விழா சிறப்பான வரவேற்பை பெற்றிருந்தது. அனைத்து முகாம் வாசிகளுக்கும் விளையாட்டுப் போட்டிகள் ஒரு மாத காலத்திற்கும் மேலாக திட்டமிடப்பட்டு நடத்தப்படும். இறுதி நாளில் கலைநிகழ்ச்சிகளுடன் கூடிய பரிசளிப்பு விழா நடத்தப்படும். பணியாளர்களுக்கு அலுவலர்களும் பேதமின்றி விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவார்கள். மே மாதங்களில் சொந்த ஊர் செல்லமாட்டார்கள். முகாம் விழா தான் பிரதானம். ஊரின் நடுவில் வெட்ட வெளியில் சினிமா பார்க்கும் அனுபவம் இன்றைய தலைமுறைக்கு இல்லை.

குறைந்த செலவில் மின்சாரத்தை உற்பத்தி செய்து இந்த துறையில் வளர்ச்சிக்கு பெரும் உதவி செய்த மின் கிராமங்கள் தற்போது மெல்ல அழியும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. பணியாட்கள் ஓய்வு பெறும்போது அவர்களுக்கு பதிலாக பணியாளர்களை நியமிப்பது நிறுத்தப்பட்டது. 1985க்கு பிறகு மின்நிலைய வருடாந்திர பராமரிப்பு பணிகள் தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டன. விளைவு மின்நிலையங்களில் அடிக்கடி பழுது ஏற்பட்டது. சில நிமிட நேரங்களில் தனது மொத்த திறனையும் கொடுத்து மின்உற்பத்தி செய்யக் கூடிய நீர் மின்நிலையங்கள் பராமரிப்பு இன்றியும் நீண்ட காலம் ஆனதாலும் தன் முழு உற்பத்தி திறனை இழக்கும் நிலையில் உள்ளன. ஒரு சில மின்நிலையங்கள் மட்டுமே புனரமைக்கப்பட்டன பணியாளர்களுக்கும் சரியான வழிகாட்டுதல் இல்லை. பணியாளர் பற்றாக்குறை பெரும் மனஉளைச்சலை ஏற்படுத்தியது.

குடும்பங்களுக்குள் சண்டை நட்புகளுக்குள் சண்டை என்ற நிலை உருவானது. பெரும்பாலானவர்கள் விருப்ப மாறுதலில் வெளியூருக்கு செல்லும் நிலை உருவானது. இன்னும் இந்த நீர் மின்நிலையங்களில் திறமையான பணியாளர் மற்றும் பொறியாளர்கள் மிச்சம் இருப்பதால் மட்டுமே அவை செயல்பட்டுக் கொண்டுள்ளன.

ஒரு காலதில் பணியாளர் பற்றாக்குறையை சரி செய்ய பயணப்படியுடன் கூடிய ஊர் மாறுதல் வழங்கப்பட்டது. பல்வேறு சலுகைகளும் வழங்கப்பட்டன. பணப்பயன் வழங்கப்பட்டது. இப்போது இந்த அலவன்ஸ்களுக்கும் சேர்த்து Income Tax பிடிக்கப்படுகின்றது. ஆனாலும், தண்டனை பெறும் பணியாளர்களை நியமிப்பதற்கான இடமாக நீர் மின்நிலைய முகாம்கள் மாறிவிட்டன.


இந்த மின்நிலைய முகாம்களில் வாழ்ந்த மகிழ்வான சந்ததி 1990 டன் முடிவடைந்துவிட்டது. பணியாளர்கள் பற்றாக்குறை இழப்புகளை அதிகரிக்கும் என்பதற்கு இந்த மின்நிலையங்கள் எடுத்துக்காட்டு இன்று பல்வேறு முகாம்களில் குடியிருப்புகளை வனத்துறையினர் ஆக்கிரமித்து உள்ளனர். வாரிய குடியிருப்புகள் முறையான பராமரிப்பு இன்றி சிதிலமடைந்து வருகின்றன. குறைந்த அளவே மின் தொழிலாளர்கள் குடும்பங்கள் முகாமில் இருப்பதால் வனவிலங்குகள் முகாமில் உலா வருகின்றன. திருநெல்வேலி, குந்தா, காடம்பாறை போன்ற நீர் மின்திட்டங்களில் போதிய பணியாளர்களை நியமிப்பது ஒன்று தான மின் கிராமங்களை காப்பாற்றும் ஒரே வழி.

இது போன்ற ஒரு மின்நிலைய கிராமத்தில் இருபத்தைந்து வருடங்கள் வாழ்ந்தவன் என்பதால் இயல்பாய் வந்த உணர்வுகளின் பிரதிபலிப்பு இந்த கட்டுரை.

இவண்

**தே. சாமுவேல் ஜான்சன்,** பி.காம்., எம்.பிஏ

இணைச்செயலாளர், உடுமலை வட்டம்.




மனிதனாக பிறந்த ஒவ்வொரு வருக்கும் பெயர் முக்கியத்துவம் வாய்ந் தது. ஒரு மனிதனை அடையாளப் படுத்திக் காட்டுவதற்கு பெயரானது இன்றியமையாதது. ஒருவரின் தனித் துவம் மற்றும் பெர்சனாலிட்டியை வரை யறுப்பதே அவர்களின் பெயர்தான்.

எல்லோருமே தம் பெயர் உலகிலேயே மிகவும் இனிமையான வார்த்தையாகும். நீங்கள் ஒருவரிடம் பேசும்போது அவரைப் பெயர் சொல்லி அழைத்து, அதன் பிறகு நீங்கள் என்ன கூறினாலும் அதை அவர் கவனமாக கேட்பார் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நாம் முதன் முறையாக ஒருவரை சந்தித்து, அவரோடு உரையாடும்போது, நம்மில் பெரும்பாலானோர், நம்முடன் உரையாடிக் கொண்டிருப்பவரின் பெயரை உள்வாங்கி கொள்வதில்லை. அவர் தன் பெயரைக் கூறினாலும் அதை நாம் கவனமாகக் கேட்பதில்லை.

**ஒருவருடைய பெயரை நினைவில் வைத்திருப்பதற்கு உதவக்கூடிய எளிய வழிகள்:**

**1. அவருடைய பெயரை மீண்டும் மீண்டும் கூறிக் கொள்ளுங்கள்.**

நீங்கள் முதன் முதலாக ஒருவரை சந்திக்கும்போது அவருடைய பெயரை இரண்டு முறை உரக்கக் கூறி, அப்பெயரை நீங்கள் சரியாகக் கேட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஒருவேளை உங்களிடம் அறிமுகம் செய்து வைக்கப்படுபவரின் பெயர் அசாதாரணமான ஒன்றாக இருந்தால், அவருடைய பெயரை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதை அவரிடமே கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். நீங்கள் அவருடைய பெயரை இன்னும் நன்றாக நினைவில் வைத்துக்கொள்ள இது உதவும்.

**2. அவருடைய பெயரை ஏதாவது ஒரு பொருளுடன் தொடர்புபடுத்திக் கொள்ளுங்கள்:**

பெயர்கள் நம் நினைவில் நிற்காமல் போவதற்கு காரணம் அது பொருட்களைப்போல் இல்லாமல் இருப்பதுதான். பொருட்களாக, இருந்தால் நம் மனத்தால் அவற்றைக் காட்சிப்படுத்த முடியும். ஒருவருடைய பெயரை நினைவில் வைத்துக் கொள்ளுவதற்கு, அவருடைய பெயரின் ஒலியோடு தொடர்புடைய பொருள் ஒன்றை உங்கள் மனத்தில் காட்சிப்படுத்திக் கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக மணியன் என்ற பெயரை மணியோடும், நல்லசிவம் என்ற பெயரை சிலையோடும், பாலு என்ற பெயரைப் பாலோடும் தொடர்புபடுத்திக் கொள்ளலாம். உங்கள் கற்பனை எவ்வளவுக்கு எவ்வளவு வினோதமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு அப்பெயர் உங்கள் நினைவில் பதிந்துவிடும்.

மேற்கூறப்பட்டவற்றை நடைமுறையில் பயன்படுத்தி பாருங்கள். அப்போது மக்கள் திடீரென்று உங்களை மேதாவி என்ற அழைக்கத் தொடங்குவர்.

அன்புடன்,

**இந்து ராஜேஷ்குமார்**

நிர்வாக உதவியாளர், தலைமைப் பொறியாளர் அலுவலகம், கோவை மண்டலம்/ கோவை.

# பயம் மற்றும் கவலை



**வா**ழ்க்கையில் நாம் கவலலைப்படும் விஷயங்களில் 87% ஒருபோதும் நடப்பதேயில்லை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதாவது வாழ்க்கையில் நீங்கள் கவலைப்படும் விஷயங்களில் பெரும்பாலானவை நடப்பதேயில்லை. எனவே, நீங்கள் பயப்படும் விஷயங்கள் குறித்து நீங்கள் கவலைப்படுவதில் அர்த்தமில்லை. பயம் என்பது உண்மையில் நடக்காமல் போக அதிக வாய்ப்பிருக்கும் விஷயங்கள் குறித்த ஒரு மாய கற்பனையே தவிர வேறொன்றும் இல்லை.

எந்த பின்விளைவுகள் ஏற்படக் கூடாது என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவற்றைப் பற்றி நீங்கள் சிந்திக்கும்போது, அதற்கு உங்கள் உடல் ஆற்றுகின்ற ஓர் எதிர்வினைதான் பயம். நீங்கள் அதை ஒரு பொருட்டாக மதிக்காமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம்.

உங்கள் வாழ்க்கையில் எது நிகழக்கூடாது என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அது குறித்து ஒரு போதும் சிந்திக்காதீர்கள். எந்தவொரு சூழ்நிலையிலும் உங்களுக்கு என்ன வேண்டுமோ அதை மட்டும் சிந்தியுங்கள். பொதுவாக உங்களுக்கு என்ன வேண்டும் என் நீங்கள் நினைக்கிறீர்களோ அதுவே உங்களுக்குக் கிடைக்கிறது. இதைத்தான், ‘‘நீ எதை நினைக்கிறாயோ அதுவாக ஆகிறாய்’’ என்றார் விவேகானந்தர்.

டாக்டர். ஜார்ஜ் ஸ்டீவன்சன் என்பவர் ஒரு (How to Deal with your tension) புத்தகத்தை வெளியிட்டிருந்தார். அதில், அவர் ‘‘உங்கள் கவலைக்கு எது காரணமோ, அதை வெளியில் சொல்லுங்கள். உள்ளுக்குள்ளாகவே வைத்து புழுங்க வேண்டாம். ஒரு விஷயத்தை ஆராய்ந்து அறியும் திறன் கொண்ட ஒருவரிடம் அது பற்றி பேசுங்கள். பேச்சில் வெளிப்படுத்துகிறபோது, பிரச்சனையின் கணம் பாதியாய் குறைந்துவிடும். கவலையைப் போக்கிக் கொள்ளும் வழிமுறையும் கண்கூடாக உங்களுக்கே தெரிய வரும். ‘‘அட, இதற்குதானா இத்தனை கவலைப்பட்டோம்?’’ என்று எண்ணி மனம் இலேசாகிவிடும்.

நம் குணத்தை பாராட்ட இங்கு இருப்பவர்களைவிட, நம் குறையை சொல்ல ஆயிரம்பேர் இங்கு இருக்கிறார்கள். அவர்கள் சொன்ன கருத்தை பற்றி கவலைப்படுபவர்கள்தான் இன்று அதிகம் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் நம்மை கடந்து செல்லும் மேகம் போன்றவர்கள். எனவே, அவர்களின் கடினமான கருத்தை உங்களுடனே வைத்துக் கொள்ளாதீர்கள்.

‘‘உன்னை வீழ்த்த நினைப்பவர்கள் பயன்படுத்தும் ஆயுதம். உன் மனதை சிதைப்பது. நம் மனதால் நாம் தெளிவாக இருக்கும் வரை நம்மை, ஒருவராலும் வீழ்த்த முடியாது!’’

பணத்தை சேமித்து கூட பின்னாளில் செலவழிக்கலாம். ஆனால், ஒருபோதும் வாழ்க்கையை சேமித்து, பின்னாளில் வாழ முடியாது. வாழ்க்கை வாழ்வதற்கே. இதில் கவலையை கொண்டு வந்து இந்த அழகான வாழ்க்கையை இழந்துவிடாதீர்கள்.

**நல்லதே நினை, நல்லதே நடக்கும்!**

**P. நாகராஜன், ME.,**
*மாநில இணைச் செயலாளர்*

## இருபத்தொன்றாவது வேலை நிறுத்தம் திரண்டெழுக தோழா!

தேசத்தின் சொத்துகளைச் சேதாரம் செய்கின்றாய்!
சீர்தூக்கிப் பார்ப்பாயா! செய்கையெல்லாம் சரிதானா!
நாசமான கொள்கையினால் நாட்டையேநீ அழிக்கின்றாய்!
நைந்திடாத தொழில்களையும்
நட்டமென்றே விற்கின்றாய்!
காசாக்கும் வேலைதனை கச்சிதமாய் செய்கின்றாய்!
காவலாளி நானென்றும் காதிலேபூ சுற்றுகின்றாய்!
பேசுகின்ற நாங்களெல்லாம் பெரும்படையே! அறிவாயோ!
பிற்போக்கு குணம்கொண்ட பேரரசின் மன்னவனே!
ஒளிர்கிறது தேசமென்று
உலகெங்கும் பரப்புகிறாய்!
ஒன்றிரண்டு உரைத்திடேன்!நீ ஊருலகம் கேட்கட்டும்!
கலிகாலம் இதுதானா! கானகமா வாழுமிடம்!
கனரகமாம் தொழில்யாவும்
கைவிட்டுப் போகிறதே!
ஒலிமுழக்கம் கேட்கிறதா! ஒற்றுமையைப் பார்த்தாயா!
ஓடஓட விரட்டிடுவோம்!
உழைப்பவர்கள் ஒன்றிணைந்தே!
பலியாகும் விவசாயி பாமரரும் கரம்கோர்த்து
பாவியுன்னை அகற்றிடுவோம்! பாரதத்தாய் மகிழ்ந்திடவே!
சோலையாக இருந்தநாடு சுடுகாடாய் மாறலாமா!
சுதந்திரத்தைப் பெற்றோமே! சுவடுகளைக் காணோமே!
ஆலையெங்கும் அணிதிரண்டு ஆர்ப்பரித்து நின்றிடுவோம்!
அமைப்புசாரா தொழிலாளி அனைவரும் திரண்டிடுவோம்!
வேலைகேட்டுப் போராடி வீதியினிலே நிற்போரோ!
வெற்றிகிட்டும் வந்திணைவீர்! வீரமிக்கப் போராட்டம்!
சாலையிலே நிற்காதீர்! சாதனையில் இடம்பெறுவீர்!
தரித்திரத்தை விரட்டிடுவோம்! சரித்திரத்தை மாற்றிடுவோம்!
இருபத்து ஒன்றாவது இந்ததேசப் போராட்டம்!
ஈடில்லா போராட்டம்! ஏவலாளை விரட்டட்டும்!
அரிமாபோல் திரண்டெழுக! அதானியும் அம்பானியும்
அடிபணியும் நாளாகட்டும்! அரசாங்கம் திருந்தட்டும்!
பொருளாதா ரக்கொள்கை புவியைவிட்டு அகலட்டும்!
புரட்சிக்கு வித்திடுவோம்! புத்திசாலி ஆளட்டும்!
செருக்கோடு நடைபோட தேசத்தைப் பாதுகாப்போம்!
சீரழிக்கும் கொள்கையினை சிதறடிப்போம்! சிறந்துநிற்போம்!




**ந**ம் வாழ்க்கையின் முன் ஏற்றப் பாதைக்கு எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் கிடைக்கும் வெற்றிக்கும் முன் உதாரணமாக ஏணி படிகளை முன்வைக்கின்றோம்.

கடந்து செல்லும் படிகளைவிட நம் வெற்றிக்கு உறுதுணையாக இருந்து படிகளையும் தாங்கி, வெற்றிபடிகளை கடந்து உயரே உயர்பவரை நிலை தடுமாறாமல் உயர செய்வது அவர் இறுக்கமாக பற்றிக் கொண்டிருக்கும் ஏணியின் முக்கிய அம்சமான மூங்கில் பூட்டுகளே!

நம்மை உயரத்திற்கு ஏற்ற உதவும் அந்த இருபக்க மூங்கில் பூட்டுகளே நம்பிக்கை, முயற்சி என்பதாகும். நாம் இவற்றை இறுக்கப் பற்றிக் கொண்டால் வெற்றிப்படிகளை எளிதாக கடந்து உயரத்தின் உச்சத்தை தொடலாம்.

மின்கம்பத்தில் எளிதாக ஏறி பழுது நீக்கிவிடலாம் என்பது நம்பிக்கை. இதன் காரணமாக கம்பத்தில் ஏறி பழுது சரி செய்வது முயற்சி. இதன் பயனாக நமக்கு கிடைப்பது வெளிச்சம் என்னும் வெற்றி.

நாம் நம் மனதில் நம்பிக்கை என்னும் விதை விதைத்தால் அது முயற்சி என்னும் மரமாக வளர்ந்து நிமிர்ந்து நிற்கும்போது வெற்றி என்னும் கணி நம் கைகளில் தவழும்.

நாம் நம்பிக்கை மட்டும் வைத்து முயற்சி செய்யாமல் இருப்பதும், நம்பிக்கை இல்லாமல் முயற்சி செய்யும் செய்தும் ''பல் இல்லாதவன் எலும்பை கடிப்பதை'' போன்றதாகும்.

நண்பர்களே நம்பிக்கையுடன் முயற்சிப்போம். வெற்றி வெளியில் இருந்து வருவதல்ல நம் நம்பிக்கையான விடாமுயற்சியின் செயலாலேயே வருவது வெற்றி.

***''நம்பி முயற்சிப்போம்***
***முடியாது நம் வெற்றி பயணம்''***

நட்புடன்
**R. சிவப்பிரகாஷ், B.E.**
*பொருளாளர், கோவை வடக்கு*



# அத்தியாயம் - 7

## (இராணுவம், கப்பல்படை & விமானப்படை)

முப்படைகள் தொடர்பான குற்றங்கள் பற்றி

வழக்கறிஞர் **தேவிபாலா குணசேகரன், M.A., B.L.,**

**பிரிவு - 131 (Section - 131)**

**குற்றம்:**

படைவீரர்களிடையே கலகத்தை தூண்டுதல், அல்லது முப்படையில் ஏதேனும் ஒரு படைவீரரைப் பணியிலிருந்து விலகுமாறு திசை திருப்பி தீயவழிக்குத் தூண்டுதல்,கலகம் என்பது - கூட்டாகக் கீழ்படிய மறுத்தல், அல்லது அத்தகைய கலகங்களில் அரசுக்கு எதிராகவோ, நிர்வாகிகளுக்கு எதிராகவோ செயல்படுதலும் ஆகும்.

**தண்டனை:**

ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறை வைப்பு மற்றும் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

**மேல் விவரங்கள்:**

கைது செய்யக் கூடியது. பிணையில் விட இயலாதது அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

**பிரிவு - 132 (Section - 132)**

**குற்றம்:**

படைவீரர்களின் கலகத்திற்கு உடந்தையாக இருத்தல், கலக்கம் அதன் காரணமாக ஏற்படுமானால்.

**தண்டனை:**

மரண அல்லது ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் சிறைவாசமும், அபராதமும்.

**மேல் விவரங்கள்:**

கைது செய்யக் கூடியது, பிணையில் விட இயலாதது, அமர்வு நீதிமன்ற எல்லைக்குள்பட்டது.

## பிரிவு - 133 (Section - 133)

**குற்றம்:**

இராணுவ வீரர், கப்பற்படை வீரர் அல்லது விமானப்படை வீரர் ஒருவர் தான் பணியிலிருக்கும் போது தனது உயரதிகாரியைத் தாக்குவதற்குத் தூண்டுதல் அல்லது உடந்தையாக இருத்தல்.

**தண்டனை:**

3 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும்.

**மேல் விவரங்கள்:**

கைது செய்யக் கூடியது, பிணையில்விட இயலாதது, முதல் வகுப்பு நடுவர் மன்ற எல்லைக்குள்பட்டது.

## பிரிவு - 134 (Section - 134)

**குற்றம்:**

பிரிவு 133ல் விவரிக்கப்பட்டுள்ளபடித் தூண்டுதல் செய்ததன்படி தாக்குதல் செய்யப்பட்டிருந்தால்.

**தண்டனை:**

7 ஆண்டுகள் சிறை வைப்பும் அபராதமும்,

**மேல் விவரங்கள்:**

கைது செய்யக் கூடியது, பிணையில் விட இயலாதது, முதல் வகுப்பு நடுவர் மன்ற எல்லைக்குள்பட்டது.

## பிரிவு - 135 (Section - 135)

அலுவலர், தரைப்படை வீரர், கடற்படை வீரர் அல்லது வான்படை வீரர் ஒருவர் தன் கடமையைவிட்டு ஓடுவதற்கு உடந்தையாக இருத்தல்.

**தண்டனை:**

2 ஆண்டுகள் சிறைவைப்பு அல்லது அபராதம் அல்லது இரண்டுமே சேர்த்து.

**மேல் விவரங்கள்:**

கைது செய்யக் கூடியது, பிணையில் விடக் கூடியது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

### பிரிவு - 136 (Section - 136)

**குற்றம்:**

135ல் குறிப்பிட்டுள்ளபடி தம் பொறுப்பைவிட்டு ஓடுபவருக்குத் தெரிந்தே புகலிடம் அளித்தல்.

**தண்டனை:**

2 ஆண்டுகள் சிறை வைப்பு அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து, தனது கணவருக்கு மனைவி அளிக்கும் புகலிடம் இந்தப் பிரிவில் சேர்க்கப்படவில்லை.

**மேல் விவரங்கள்:**

கைது செய்யக் கூடியது, பிணையில் விடக்கூடியது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

### பிரிவு - 137 (Section - 137)

**குற்றம்:**

கடமையிலிருந்து தப்பியோடி நபரை வியாபாரக் கப்பலில் அதன் முதல்வர் அல்லது பொறுப்பாளரின் கவனக் குறைவால் மறைத்து வைத்தல்.

**தண்டனை:**

ரூபாய் 500/- அபராதம்.

**மேல் விவரங்கள்:**

கைது செய்யக் கூடாதது, பிணையில்விடத் தக்கது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

### பிரிவு - 138 (Section - 138)

**குற்றம்:**

அலுவலர், இராணுவ, கப்பற்படை மற்றும் விமானப்படை வீரர் ஒருவர் தம் பணியில் கீழ்ப்படிய மறுத்த செய்கைக்கு உடந்தையாக இருத்தல், தூண்டுதல் காரணமாக கீழ்ப்படிய மறுத்த குற்றம் செய்யப்படுமானால்.

**தண்டனை:**

6 மாதங்கள் சிறைத் தண்டனை, அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து.

**மேல் விவரங்கள்**

கைது செய்யக் கூடியது, பிணையில்விட இயலாதது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

### பிரிவு - 139 (Section - 139)

தரைப்படைச்சட்டம், 1950ஆம் ஆண்டு தரைப்படைச் சட்டம், கடற்கரைக் கட்டுப்பாட்டுச் சட்டம், 1934ஆம் ஆண்டு இந்தியக் கடற்படை (கட்டுப்பாட்டுச்) சட்டம், வான்படைச் சட்டம் அல்லது 1950ஆம் ஆண்டு வான்படைச் சட்டம் இவற்றில் எதற்கேனும் உட்பட்டுள்ள எவரும், இந்த அத்தியாயத்தில் இலக்கணங் கூறப்பட்ட குற்றங்கள் எதற்கும் இச்சட்டத்தின்படி தண்டனைக்கு உட்பட்டவர் ஆகார்.

### பிரிவு - 140 (Section - 140)

**குற்றம் :**

இராணுவ, கடற்படை மற்றும் விமானப்படை வீரரால் பயன்படுத்தப்படும் சிறப்பு உடுப்பு மற்றும் அடையாளச் சின்னங்களை தொடர்பற்ற நபர்கள் எடுத்துச் செல்வதும், அணிவதும் குற்றமாகும்.

**தண்டனை:**

3 மாதங்கள் சிறைவைப்பு அல்லது ரூபாய் 500/- வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து வழங்க முடியும்.

**மேல் விவரங்கள்:**

கைது செய்யக்கூடியது, பிணையில்விடக் கூடியது, எந்த நடுவர் மன்றத்திலும் வழக்கிடத் தகுந்தது.

(தொடரும்)

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**

**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**

39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.

✆ : 9841446621

tnebemployeesfederation3600@gmail.com

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# மலையரசியின் மடியில் மலர்ந்தது TNEBEF செங்கொடி

**ம**லைகளின் அரசி உதகமண்டலத்தில் நம் TNEBEF சங்கத்தின் எழுச்சி பயணத்தை 03.09.2022 மற்றும் 04.04.2022 ஆகிய இரு தினங்களில் வெற்றியடையச் செய்யும் வியூகத்தை தளபதியார்கள், மதிப்பிற்குரியவர்கள் திரு. **J.L. பாஸ்டின்ராஜ்** மாநில பொருளாளர், திரு. **A. கண்ணாதுரை** மாநில உபத்தலைவர் அவர்களின் விடுத்தலின்படியும், தலைமையின் கீழ் செயற்படை வீரர்கள் திரு. **A. ராஜேந்திரன்** - தலைவர், வடக்கு, திரு. **R. மகேஷ்குமார் -** செயலாளர் சோமனூர் கோட்டம், திரு. **S. தினேஷ்குமார்** - தலைவர் .கு. வடமதுரை கோட்டம், திரு. **M. காமாட்சி முருகன் -** செயலாளர் கு.வடமதுரை கோட்டம், திரு. **R. ராஜேஷ்குமார்,** உதவி மின்பொறியாளர் இவர்கள் ஒரு குழுவாகவும், திரு. **I. லியோபால் -** பொருளாளர், தெற்கு, திரு. **A. முருகவேல் -** செயலாளர், வடக்கு, திரு. **R. சிவப்பிரகாஷ் -** பொருளாளர், வடக்கு, திரு. **K. ராஜன் -** ATO, திரு. **K. ரமேஷ் -** செயலாளர் சீ.நா.பா. கோட்டம் ஓர் குழுவாகவும் பயணித்து காரமடையில் சங்கமித்து காலை 10 மணியளவில் எழுச்சி பயணத்தை மேற்கொண்டோம்.

வெள்ளியங்காடு வழியாக மலையரசி எங்களை வரவேற்பு மலைபாதையில் கோடை வெப்பத்தின் தாக்கத்துடன் பயணித்தோம். அடர்ந்த கானகத்தின் அட்டகட்டி என்னும் இடத்தில் கனடா மந்திரி திரு. கார்டன் சர்ச்சில் அவர்கள் குந்தா-நீர் மின்சார விரிவாக்க திட்டத்தை 1961 - வருடம் ஜனவரி மாதம் 8ந் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் பெருந்தலைவர் திரு. K. காமராஜ் அவர்கள் தலைமை வகிக்கத் துவங்கி வைத்ததின் நினைவு கல்தூண் ஸ்தூமி-ஐ பார்வையிட்டோம். சுமார் அரை நூற்றாண்டை தாண்டியும் மிக கம்பீரமாக உயர்ந்து நிற்கும் இந்த ஸ்தூபியை பார்க்கும்போது பிரம்மிப்புடன் மலைக்க வைக்கும் இந்த அதிசயத்தக்க குந்தா-நிர் மின்நிலையங்கள் அமைக்க மூளையாக இருந்து செயல்பட்ட பொறியாளர்கள் மற்றும் பல இன்னல்கள் தாங்கி செயல்பட்ட தொழிலாளர்களையும் எங்கள் கண்முன் நிறுத்தியது. அவர்களுக்கு வீர வணக்கத்தை செலுத்தினோம். வரலாற்று சிறப்பு வாய்ந்த இந்த கம்பீர கல்தூண் ஸ்தூபி கவனிப்பு, பராமரிப்பு இன்றி தனிமைப்படுத்தப்பட்டு இருப்பது கண்டு கண்களில் நீர்துளி எட்டிப் பார்க்க மீண்டும் ஓர் வணக்கத்தை செலுத்தி பயணத்தை தொடர்ந்தோம்.

மிகவும் கரடு முரடான பழுதடைந்த சாலையின் வழியே மிகவும் சிரமத்துடன் பயணித்து குந்தா - நீர் மின்நிலையம் பில்லூர்-4-ஐ அடைந்தோம். அங்குள்ள பணியாளர்களிடம் நலம் விசாரித்து குறைகளை கேட்டறிந்து நம் சங்கத்தின் செயல்பாடுகளை எடுத்துரைத்தோம். திருமதி. சரசு, Time Keeper Ist Grade மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் இருவர் எங்களுக்கு சிறப்பான மதிய உணவை தயாரித்து வைத்திருந்தனர். மதியம் நண்பகல் 1.45 என்பதால் நல்ல பசியின் காரணமாகவும் சுவை மிக்க உணவு என்பதால் திருப்தியாக உண்டு பசியாறினோம். மேலும் திருமதி. சரசு மற்றும் ஒப்பந்த ஊழியர்கள் நம் சங்கத்தின் மீது ஈடுபாடு கொண்டு தம்மை இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு நன்றி கூறி பயணத்தை தொடர்ந்தோம்.

சுமார் ஒரு மணி நேர பயணத்திற்கு பிறகு 3.30 மணியளவில் குந்தா நீர் மின்நிலையம் பரளி-3ஐ அடைந்தோம். அங்குள்ள பணியாளர்களிடம் குறைகளை கேட்டறிந்து பயணத்தை மேற்கொண்டோம்.

வளைந்த, நெளிந்த மலை பாதைகளில் பயணித்து சுமார் 4.30 மணியளவில் குந்தா நீர் மின்நிலையம் - கெத்தை-2ஐ அடைந்தோம். உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர்

மற்றும் பணியாளர் நண்பர்கள் எங்களுக்கு சிறப்பான வரவேற்பை அளித்தனர். அவர்களிடையே நமது மாநில பொருளாளர் மற்றும் மாநில உபதலைவர் அவர்களும் குறைகளை கேட்டறிந்து சங்க செயல்பாடுகளை பற்றி உரையாற்றினர். பின்பு நமது சங்க காலண்டர், மாத இதழ், டைரி வழங்கப்பட்டு நன்றி கூறி விடைபெற்றோம். அங்குள்ளவர்களின் கண்களில் எங்களின் பசியாற்றி சிறப்பு செய்ய வசதி இல்லாத குறை தெரிவதை கண்டோம்.

5.00 மணியளவில் குந்தா நீர் மின்நிலையம்-1ஐ அடைந்து உதவி செயற்பொறியாளர், உதவி மின்பொறியாளர் மற்றும் பணியாளர்களின் சிறப்பான வரவேற்பை ஏற்று சிறு உரை நிகழ்த்தி குறைகளை கேட்டறிந்து நன்றி கூறி விடைபெற்றோம்.

தனிமைப்படுத்தப்பட்ட அடர்ந்த வனப்பகுதியில் மிகுந்த சிரமத்துடனும், உறுதியுடனும் பணியாற்றும் இவர்களின் நியாயமான கோரிக்கைகளான தரமான சாலை வசதி, சிறந்த உடனிடியாக கிடைக்கும் மருத்துவ வசதி மற்றும் மருத்துவ அவசர ஊர்தி வசதி (Ambulance) ஏற்படுத்த வேண்டும். மேலும் அனைவரது குற்றசாட்டு இவர்களின் விருப்ப ஊர் மாற்றம் விண்ணப்பம் பரிசீலிக்கப்படாமல் மேற்பார்வை பொறியாளரால் நிராகரிக்கப்படுகிறது என்பதாகும். மேலும் பணியாளர் பற்றாக்குறை நிவர்த்தி செய்ய வேண்டும். இவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்க நமது சங்கம் நிச்சயம் போராடும் என்று உறுதியளித்து இவர்களின் நிலைகண்டு கனத்த இதயத்தோடு விடைபெற்று பயணத்தை தொடர்ந்தோம்.

எங்கள் செயல்பாடுகளை கண்டு மகிழ்ந்த மலையரசி மனமிறங்கி சில்லென்ற குளிர்ந்த காற்றை வழங்கி வரவேற்க மாலை 6.00 மணியளவில் மஞ்சூரை அடைந்து தேநீர் அருந்தி சிறிது ஓய்வெடுத்து பயணித்தோம்.

உதகையை 8.00 மணி இரவில் வந்தடைந்தோம். இதுவரை துணையாக வந்து வழிதடங்களை வழிகாட்டி சில வரலாற்று பதிவுகளை எங்களுடன் பகிர்ந்து உதவிகரமாக இருந்த திரு. K. ராஜன் ATO அவர்கள் எங்களிடம் இருந்து விடைபெற்றார். நாங்களும் அவருக்கு நன்றி பாராட்டி விடைபெற்றோம்.

எங்கள் பயணம் அடுத்து மசனகுடியை நோக்கி பயணித்தது. இடையில் காவல்துறை நண்பர் (Checkpost) வழிமறித்து இரவு நேர பயணத்திற்கு இந்த பாதை உகந்தது அல்ல என கூறியும் ஆபத்தான இந்த மலைப்பாதையை கடக்க சில பயண அறிவுரைகளை கூறி அனுமதித்தார். அவருக்கு நன்றி கூறி பயணித்தோம்.

மேற்கொண்டு ஆபத்தான இரவு நேர திக், திக் பயணம் மிக பதட்டத்துடன் ஆரம்பமானது. காவல்துறை நண்பர் சொன்னதிற்கேற்ப பாதை மிகவும் செங்குத்தாக கீழறங்கிய நிலையில், மிக குறுகலான ஊசி கொண்ட வளைவுகள் நிறைந்து காணப்பட்டது. மிக மெதுவாக ஆபத்தான மலைப்பாதையை கடந்து 9.30க்கு மசனகுடி ஆய்வு மாளிகையை வந்தடைந்தோம்.

எங்கள் வருகைக்காக காத்திருந்த திரு. S. சசிகுமார் Time keeper Ist Grade மசனகுடி முகாம் அவர்கள் எங்களை வரவேற்றார்.

இரவு உணவை திரு. ஊமேஷ். Winch driver மற்றும் அவரின் குடும்பத்தார் தயார் செய்து வைத்திருந்தனர். சுவையான இரவு உணவை உட்கொண்டு நல்ல பராமரிப்பில் இருந்த ஆய்வு மாளிகை அறைகளில் உறங்க சென்றோம். பயண களைப்பினாலும், சில்லென்ற இரவு நேர குளிர்ச்சியின் காரணமாகவும் நல்ல உறக்கம் கொண்டோம்.

04.04.2022 காலை 6.00 மணியளவில் மலைபிரதேச பறவைகளின் ஒலி காதில் விழ கண்விழித்து அனைவரும் தங்களை தயார்படுத்திக் கொண்டு பயணப்பட்டு 8.00 மணியளவில் இறுதி நிலை நீர் மின்நிலையம், செயற்பொறியாளர் அலுவலகம் மசனகுடி வந்தடைந்தோம். கொடியேற்றி விழாவிற்கான ஏற்பாடுகள் சிறப்பான ஏற்பாட்டுடன் சுமார் 35 பணியாளர் சங்க உறுப்பினர்கள் எங்கள் வருகைக்காக காத்திருந்து நம்மை வரவேற்றனர்.

திரு. K. மணி சிறப்பு நிலை முகவர் (ஓய்வு) அவர்கள் தலைமை தாங்க நமது மாநில பொருளாளர் அவர்கள் கம்பீரமாக உயர்ந்து நின்ற கொடிகம்பத்தில் நமது சங்க கொடியை ஏற்றிய தருணம் "TNEBEF சங்கம் வாழ்க! வாழ்க! என்ற கோசம் விண்ணை முட்ட சங்க செங்கொடி மெதுவாக உயரத்தை தொட்டு பட்டொளி வீசி சிறகடித்தது. மலையரசியின் மடியில் புன்னகையுடன் மலர்ந்தது.

மாநில பொருளாளர் மற்றும் உபதலைவர் அவர்கள் சிறப்புரையாற்றினர். இனிப்புகள் வழங்க முதல் கொடியேற்று விழா சிறப்புடன் நிறைவு பெற்றது. அனைவருக்கும் நன்றி கூறி ஆய்வு மாளிகை வந்தடைந்து காலை சிற்றுண்டி முடித்து பசியாற உணவு படைத்தவருக்கு நன்றி கூறி மீண்டும் பயணத்தை தொடர்ந்தோம்.

மதியம் 12.30 மணியளவில் சிங்கார - பழமை வாய்ந்த பைக்கார நீர் மின்நிலையத்திற்கு வந்தடைந்தோம். சுமார் 40 பணியாளர் சங்க உறுப்பினர்கள் நம்மை வரவேற்று உபசரித்தனர். நமது மாநில பொருளாளர் அவர்கள் கம்பீரமாக சங்க கொடியை ஏற்ற மீண்டும் "TNEBEF சங்கம் வாழ்க! வாழ்க என்னும் கோசம் விண்ணைத் தொட்டது. பழமையும், வரலாற்று சிறப்பு மிக்க சிங்கார நீர் மின்நிலைய முகாமில் நமது சங்க செங்கொடி சிறகடிக்க ஆரம்பித்தது. சிறப்புரையாற்றி பணியாளர்களின் குறைகளை கேட்டறிந்தோம்.

திருமதி. J.B. கீதா Staff நர்ஸ் அவர்கள் 12 வருட காலமாக ஒப்பந்த முறையில் பணியாற்றி வருவதாக தெரிவித்தார். மேலும் பல ஒப்பந்த பணியாளர்கள் சுமார் 10 வருட காலமாக பணியாற்றி வருவதாகவும் தெரிவித்தனர். இவர்களின் அனைவரது கோரிக்கை ஒன்றே ஒப்பந்த பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும் என்பது இவர்களிடத்தில் நமது சங்கம் உறுதுணையாக நிற்கும் என்று உறுதியளித்து நட்புடன் வழங்கிய தேநீர் அடுத்த இரண்டாவது கொடியேற்று விழாவும் இனிதே நிறைவு பெற்று நன்றி கூறி விடைபெற்றோம்.

முதுமலை வழியாக கூடலூர் பயணம். எங்களுடன் திரு. S. சசிகுமார் Time keeper அவர்களும் இணைந்து கொண்டார். இந்த பயணத்தில் பயண பாதையின் இரு பக்கங்களிலும் ஓரமாக நின்ற யானைகளும், மான் கூட்டங்களும், குரங்குகளும், பறவைகளும் சந்தோசத்துடன் எங்களை வரவேற்று வழியனுப்பி வைத்தது. தொடர்ந்த பயணம் மாலை சுமார் 3.00 மணியளவில் கூடலூர் அடைந்தது.

மதியம் கடந்து மாலை நெருங்கும் வேளை பசி எடுக்க திரு. M. பாலமுருகன், செயலாளர், திரு. A. பிலிம்குமார் பொருளாளர் மற்றும் கேங்மேன் நண்பர் எங்களுக்கு உணவு வழங்கி பசியாற்றினர்.

மூன்றாவது கொடியேற்று விழா கூடலூர் உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் சுமார் மாலை 4.30 மணியளவில் ஆரம்பமானது. மாநில பொருளாளர் அவர்கள் சங்க கொடியை ஏற்றினார். சங்க கொடி கம்பீரத்துடன் அசைவதை கண்டு இரண்டு மழலையர்கள் TNEBEF சங்கம்

வாழ்க! வாழ்க என்று எழுப்பிய மழலை குரல் கேட்டு அனைவரது மனம் மகிழ்ந்தது. அடுத்த இளைய தலைமுறையை வளர்க்கிறது நமது சங்கம் என்று பெருமை கொண்டோம். மாநில பொருளாளர் அவர்களும், மாநில உபதலைவர் அவர்களும் சிறப்புரையாற்றினர். இனிப்புகள் வழங்க, விழா நிறைவடைய நன்றி கூறி விடைபெற்றோம்.

எடுத்த முயற்சி வெற்றி கண்டு எங்கள் பயணம் கோவை மண்டலம் நோக்கி ஆரம்பமானது. அனைத்தும் சிறப்புடன் நடைபெற்றது என்ற மகிழ்ச்சி தளபதியார்களின் முகத்தில் தவழ்ந்ததை கண்டு கோவை மண்டல செயல்வீரர்கள் மனம் பெருமை கண்டது.

இந்த எழுச்சி பயண வெற்றிக்கு காரணம் நம்மிடையே கருத்து வேறுபாடு இல்லா ஒற்றுமையும் செயல்பாடும் என கூறி மாநில பொருளாளர் அவர்களும், மாநில உபதலைவர் அவர்களும் நன்றி பாராட்டினர்.

மேற்கண்ட பயணத்தில் மசனகுடி முதல் கூடலூர் வரை எங்களுக்கு வழிகாட்டியாகவும், அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி தந்து விடைபெற்ற தோழர் திரு. S. சசிகுமார், Time keeper, Ist Grade அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

எங்களை ஆபத்தான மலைபாதைகளில் வாகனத்தில் பாதுகாப்பாக அழைத்து சென்று, அழைத்து வந்த திரு. R. ராஜேஷ்குமார், உதவி மின்பொறியாளர், திரு. A. முருகவேல் செயலாளர் கோவை வடக்கு அவர்களுக்கும் பயணகுழு சார்பாக மனமார்ந்த நன்றிகள்.

இதுவரை எங்களுடன் படித்து பயணித்த அனைவருக்கும் நன்றிகள்.

மலையரசியின் மடிகளில் மலர்ந்த TNEBEF செங்கொடிகள் எங்கள் உள்ளத்தில் சிறகடித்து கூறியது இந்த எழுச்சி பயணம் முடிவல்ல! ஆரம்பம் என்று...

பயண நினைவுகளுடன்
**R. சிவப்பிரகாஷ் B.E.**
பொருளாளர், கோவை வடக்கு

## இராமநாதபுரம் மின்திட்ட நிர்வாகிகள்

| | |
|---|---|
| *PRESIDENT :* | **A. JOSEPH**<br>Revenue Supervisor (Rtd)<br>31-1/161, A-19, First Street,<br>Main Nagar, Paramakudi,<br>Ramnad (Dt) 623701. |
| *WORKING PRESIDENT :* | **S. PANNERSELVAM**<br>Assistant Engineer/ VGTPS<br>O/o. SE/VGTPS/ Ramnad. |
| *SECRETARY :* | **P. MUTHURAMALINGAM**<br>Gangman<br>O/o. AE/O&M/TNEB<br>Mandapam Camp, Ramnad Division |

| | |
|---|---|
| *TREASURER :* | **S. PAULRAJ**<br>Line Inspector<br>O/o. AE/O&M/TNEB<br>R.S. Mangalam, Ramnad Division |
| *ORGANAISING SECRETARY :* | **V. KADHAR BASHA**<br>Foreman I Grade<br>O/o. 110/33/11KV Substation<br>Kadaladi, Paramakudi Division |
| *VICE PRESIDENT :* | **M. MUTHUMURUGAN**<br>D.No. 8, Neelamegam Pillai Street,<br>Markkayankottai<br>Chinnamanoor - 625515<br>Theni Dt. |
| *JOINT SECRETARIES :* | **M. RAJKUMAR**<br>Gangman<br>O/o AE/O&M/TNEB<br>R.S. Mangalam<br>Ramnad Division |
| | **M. PRAVEEN**<br>Gangman<br>O/o AE/O&M/Uchipuli<br>Ramnad Division |
| | **R. KAMARAJ**<br>No. 6, Raman Dhanam Illam,<br>Sivasakthi Nagar,<br>Chokkanathapuram<br>Chinnamanoor Post<br>Theni District |
| *RAMNAD DIVISION SECRETARY :* | **S. GOWTHAMAN**<br>Gangman<br>O/o AE/O&M/ TNEB<br>Thondi, Ramnad Division |
| *PARAMAKUDI DIVISION SECRETARY :* | **S. ELANGOVAN**<br>Head Draughtsmen<br>O/o EE/O&M/ Paramakudi<br>Paramakudi Division |

## கன்னியாகுமரி மின்திட்ட நிர்வாகிகள்

| | |
|---|---|
| *PRESIDENT :* | **P. VEDHAMANI**<br>Accounts Supervisor<br>AAO/Revenue Branch<br>O/o. SE/Distribution /TNEB<br>Parvathiupuram,<br>Kanyakumari. |
| *SECRETARY :* | **R. SOMASUNDARAM**<br>Assessor<br>O/o. AE/O&M/TNEB<br>Keela Krishna Pudur,<br>Melakrishnapudur (Po)<br>Nagercoil - 629601. |
| *TREASURER :* | **C. MANIKANDAN**<br>Assessor<br>O/o. AE/O&M/TNEB<br>Paraseri<br>Thuckalay Division<br>Nagercoil |
| *WORKING PRESIDENT :* | **K. SIVASUBBU PANDIAN**<br>40/6, EB Colony<br>Maharaja Nagar,<br>Tirunelveli-1. |
| *ORGANISING SECRETARY :* | **R. SURYANARAYAN RAJAH**<br>Spl. Grade Foreman<br>O/o AE/O&M/TNEB<br>Asaripallan, Nagercoil,<br>Kanyakumari Dt-629201 |

## புதுக்கோட்டை மின்திட்ட நிர்வாகிகள்

| | |
|---|---|
| *PRESIDENT :* | **R.M. PERIYAN SUBRAMANIAN**<br>Revenue Supervisor<br>O/o. AE/O&M/Town/TNEB<br>Aranthangi,Pudukottai. |

| | |
|---|---|
| ***SECRETARY :*** | **V. KUMAR**<br>Foreman I Grade<br>O/o. AE/O&M/TNEB<br>Nachanthupatty<br>Thirumayam<br>Pudukottai. |
| ***TREASURER :*** | **J. KARUNAIDASS BRITTO**<br>Revenue Supervisor<br>O/o. AE/O&M/TNEB<br>Kodikulam<br>Aranthangi<br>Pudukottai |
| ***ORGANISING SECRETARY :*** | **A. KARTHICK**<br>Assessor<br>O/o. AE/O&M/TNEB<br>Kothamangalam<br>Alangudi<br>Pudukottai |

## வாரியத்திற்கு நமது கடிதங்கள்

பெறுநர்: நாள்: 31.03.2022

**செயலாளர்**
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை, சென்னை - 600 002.

ஐயா,

**பொருள்** : **ஓய்வூதியர் - மருத்துவ காப்பீடு - செலவினை திரும்ப பெறுதல் - மருத்துவக்குழு - ஆய்வு - தொடர்பாக.**

**பார்வை** : **1) (i) ந.க.எண். 6823/ம.கு./2021 நாள்:12.01.2022**
**(ii) ந.க.எண். 1146/ம.கு/2022 நாள்: 16.3.2022 இணை இயக்குநர் மருந்தகம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நலம் - விருதுநகர்.**
**2) (i) Lr. No. 34668/2968/F46/F461/PPO NO. 39945/2021 Dt: 15.11.2021**
**ii) Lr. No. 5388/493/F46/F461/2022 Dt. 25.02.2022**

பார்வை 2(1)ல் கண்டுள்ளவாறு திருமதி. V. பேச்சியம்மாள் அவர்கட்கும் பார்வை 2 (2)ல் கண்டுள்ளவாறு திருமதி. J. வெள்ளையம்மாள் அவர்கட்கும் மருத்துவ சிலவினங்களை திரும்ப பெற தணிக்கை கிளை மூலம் விருதுநகர் இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் மற்றும் குடும்ப நல அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

பார்வை (1)ல் கண்டுள்ளவாறு ஓய்வூதியர்களை நேரடியாக ஆஜராகக் கேட்டுக் கொண்டுள்ளதுடன் ரூ. 60/- செலுத்தியும் கேட்டு மேற்கண்ட மருத்துவ சிலவினங்களை திரும்ப பெற நேரில் ஆஜராகவில்லை என்றால் எவ்வித பரிந்துரையுமின்றி திரும்ப அனுப்பப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஓய்வூதியர்கள் மருத்துவ சிகிச்சை மேற்கொண்டவர்கள் நேரில் செல்ல முடியாத நிலை உள்ளது. மேலும் தகவல் முதல் நாள் கிடைக்கும் வரையில் இணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்படுகிறது. இந்த நிலையில் ஓய்வூதியர்கள் மருத்துவ செலவை திரும்ப பெற முடியாமல் தவிக்கும் நிலை உருவாகியுள்ளது.

எனவே, செயலாளர் அவர்கள் இப்பிரச்சினையில் தலையிட்டு தகுந்த உத்திரவிட்டு ஓய்வூதியர்கள் மருத்துவ சிலவை திரும்ப பெறுவதில் உள்ள இடர்பாடுகளைக் களைந்து ஓய்வூதியர்களுக்கு உடன் மருத்துவ சிலவுத் தொகை திரும்ப கிடைத்திட ஆவன செய்திட வேண்டுகிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**(A. சேக்கிழார்)**
பொதுச்செயலாளர்

## டிசம்பர் 2021க்கு முன்னர் மருத்துவ காப்பீட்டுப் பிடித்தம் செய்த தொகையை கேங்மேன் பணியாளர்க்கு திரும்ப அளிக்கும் உத்தரவு

Secretariat Branch
144, Anna Salai,
Chennai-2

**Memo. (Per.) No. 7218/A13/A131/2022-1, dated : 25.03.2022**

Sub : TANGEDCO - Establishment - Class IV Service - New Health Insurance Scheme 2016/2021 - Inclusion - of Gangman (Trainess) and their family members - Subscription towards NHIS effect from Deceomber 2021 - Refund of the amount deducted towards NHIS 2016/2021 from the Gangman from the date of joining - Orders - issued.

Ref : 1. G.O.Ms. No. 160 Finance (Salaries) Department, dated 29.06.2021.
2. (Per) CMD TANGEDCO Proceedings No. 162 (SB) dated 17.07.2021.
3. TANGEDCO Memo. (Per.) No. 29595/A17/A171/2021-1, dated 18.12.2021

****

In the Government order dated 29.06.2021 orders have been issued implementing the New Health Insurance Scheme, 2021 to provide Health Care Assistance to the employees of Government Departments, Public Sector undertakings, Statutory Boards, Local Bodies, State Government Universities, willing State Government Organisations/Institutions and their eligible

family members for four years commencing from 01.07.2021 to 30.06.2025. Based on the above orders of Government of Tamil Nadu, the New Health Insurance Scheme 2021 was implemented in this corporation to provide Health Care Assistance to the employees of TANGEDCO/ TANTRANSCO & TNEB Ltd., and their eligible family members vide Proceedings dated 17.07.2021.

In continuation of the above orders in the Memo. dated 18.12.2021, orders have been issued including the Gangman (Trainess) and their eligible family members under the coverage of New Health Insurance Scheme' 2021, and the enrollment of the Gangman (Trainees) under the New Health Insurance Scheme' 2021 compulsory. It was also ordered that the monthly subscription shall commence from the salary for the month of December' 2021 onwards.

3. It was brought to the notice that, in certain distribution circles the subscription towards NHIS\ 2016/2021 from the Gangman (Trainee) has been recovered from the date of their joining. The matter was examined and it ha been decided to refund the amount to the Gangman (Trainees) from whom the subscription towards NHIS has been deducted from their salary from the date of joining and till November' 2021, since the Gangman has been included in the said Scheme with effect from December' 2021 only.

4. Accordingly all the Chief Engineers, Superintending Engineers are requested to give necessary instructions to their pay drawing officer's to refund the subscription towards NHIS's 2016/2021 to the Gangman (Trainees) from whom the amount has been deducted from their date of joining and upto November' 2021, if it has been deducted from their salary.

**(BY ORDER OF THE CHAIRNAM-CUM-MANAGING DIRECTOR)**

**A. MANIKKANNAN**
Secretary/TANGEDCO

**தி. பாலகிருஷ்ணன்,** முகவர் முதல் நிலை,
கண்ணம்பாளையம்/மாநகர், கோவை - செல்: 9976549696

**இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்**
**கழிபேர் இரையான்கண் நோய். - குறள்**

**பொருள் :** பிடித்த உணவின் மேல் உள்ள ஆசையால் ஏற்படும் பசி பொய் என அறிந்து, உண்மையான பசி ஏற்பட்டவுடன் பசி நிலவும் அளவு மட்டும் உண்பது ஆகும். அளவுக்கு அதிகமாக உண்ணுபவனிடத்தில் நோய்கள் நீங்காதிருக்கும் என உணர்க...

**உடல் அறிவியல்**

இயற்கை வேகங்களை அடக்க கூடாது. ‘‘மித வேகம் மிக நன்று’’ இது வாகன இயக்க கட்டுப்பாடுகளை குறிக்கிறது. இதேபோல் உடலின் செயல் இயக்கங்களாலும், மனதாலும் உடலிலிருந்து வெளி்யேற தயாராக இருப்பதை இயற்கை வேகம் என்கிறது தமிழ் மருத்துவம்.

அடக்கக் கூடிய இயற்கை வேகம் என்பது கோபம், ஆசை, பொறாமை, காமம் போன்ற வற்றை குறிக்கிறது. இவற்றை மனக்கட்டுப்பாடுடன் கட்டாயம் அடக்கி கையாள வேண்டும்.

நடைமுறையில், ஆண் பெண் இருபாலரும் வேலை கூச்சம் இடவசதியின்மை காரணமாக உடல் செயல் இயக்கங்களால் வெளிவரும் இயற்கை வேகங்களை அடக்கும் வழக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள்.

ஆண்களாக இருப்பினும், பெண்களாக இருப்பினும் எந்நேரத்திலும், எக்காலத்திலும் இயற்கை வேகங்களை அடக்கக் கூடாது.

வாயு, மலம், சிறுநீர், தும்மல், தண்ணீர் தாகம், தூக்கம், இருமல், சிரமத்தால் ஏற்படும் மூச்சிறைப்பு, கொட்டாவி கண்ணீர், வாந்தி, விந்து, பசி ஏப்பம் இவை இயற்கை வேகங்கள். (இந்த 14 வேகங்களில் 1, 2 அடக்கினாலே, இதயம், பாதிப்புறும் என்பது உண்மை)

**''ஜீரண மண்டலத்தை சீர்படுத்தும் வேப்பம்பூ''**

தற்போது பங்குனி மாதத்தில் ''வேப்பம்பூ'' பூக்கும் மாதம். சேகரித்து பயன்படுத்த அருமையான காலம்.''

1) 50 கிராம் வேப்பம் பூ, 100 மி.லி. தேங்காய் எண்ணெயில் காய்ச்சி தலைக்கு பயன்படுத்த ''பொடுகு'' தொந்தரவு எக்காலத்திலும் வரா.

2) வேப்பம் பூவில் துவையல், ரசம் தயாரித்து சாப்பிட குமட்டல், வாந்தி, மயக்கம் சரியாகும்.

3) வேப்பம் பூ உடலில் உள்ள கெட்ட கிருமிகளை அழித்துவிடும் ஆற்றல் பெற்றதாகும். நீரில் ஊற வைத்து குடிக்க உடலில் உள்ள பித்தத்தன்மை (உடல் சூடு) நீங்கும்.

4) நீண்ட நாள் சாப்பிட்டு வர தோல்நோய்கள், குடல் புழுக்கள், வாயுத்தொல்லை, ஏப்பம், பசியின்மை போன்றவைகளுக்கு அதிக பலனுண்டு.

5) பூவை வெயிலில் காய வைத்து பருப்புப் பொடியுடன் சேர்த்து சாதத்துடன் சாப்பிட வாந்தி, ஏப்பம், பித்தம் நீங்கும்.

6) பூ, ஜீரணத்தை அதிகரிக்கும் ஆற்றலுண்டு.

7) கொதிக்கும் நீரில் பூவையிட்டு ஆவி பிடிக்க தலை, காது வலி நீங்கும்.

8) வாதம், பித்தம், கபம் இந்த 3 நாடிகளையும், சமன்படுத்தும் பேராற்றல் கொண்டது.

9) கேன்சர் கிருமிகளை கொல்வது, குளிர்ச்சி தருவது, குடற்புண்ணை சரி செய்வது மனநிம்மதி தருவது, இன்னும் பல...

(சாலையோரங்களிலும், கிராமப்புறங்களிலும் இந்த பங்குனி மாதத்தில் பூத்து குலுங்கும் வேப்ப மரத்து பூக்கள். அவ்வளவாக பார்வையை கவர்வதில்லை. ஆனால், பூவிலிருந்து கிளம்பும் ஒரு வகையான வாசம் மஞ்சளையும், சாணத்தையும், லேசாக தீயிட்டு கருக்கினால், வருவது போல வாசம் (மணம்) இதை நுகராமல், வேப்பமரத்தை காண்ட முடியாது. இப்பங்குனி மாதத்தில்)

சுகருக்கு சரியான எதிரி, ''வேப்பம்பூ''

''நீரழிவின் பேரழிவு வேப்பம்பூ''.

சித்திரை மாதத்தில் வரும் என்றாலும் பங்குனியில் அதிகம். எளிமையாக வாரத்தில் 1 கரண்டி வெல்லத்துடன் இல்லையெனில் நெட்டில் தேடுங்க. பச்சடி, ரசம், அவியல்... என்று இன்னும் பல.

நம்ம பெரியவர்கள், இதை நாம் சாப்பிட வேண்டும் நல்ல ஆரோக்யமாக இருக்க வேண்டும் என்பதற்காக உகாதி, சித்திரை, முதல் நாளன்று வாழைப்பழத்துடன் சாப்பிட வைத்து இருந்தனர். ''மெல்ல மறந்தாயிற்று.''

**''வேப்பெண்ணெய்''**

தினமும் வேப்பெண்ணெய், முகத்தில் தடவி கழுவி வர தோல் சுருக்கம் மறைந்து இளமை தோற்றம் பெறலாம். தோல் மென்மையாக இருக்கும். கரும்புள்ளி மறையும். குளிர்காலங்களில் ஏற்படும் தோல் வெடிப்பை சரி செய்யும்.

தேங்காய் எண்ணெயில் கொஞ்சம் வேப்பெண்ணை கலந்து தடவி வர, பொடுகு தொல்லை நீங்கும். ''அடர்த்தியான கூந்தலை பெறலாம்''

**''மருத்துவம் என்பது எளிமையானதா? சிரமமானதா?''**

மருத்துவம் என்பது எளிமையானது எப்போது என்றால், நோய்க்கான மூலகாரணத்தை அறிந்து சரிசெய்தால், ஆரோக்யம் கிடைக்கும். மரணத்தை தள்ளி போடலாம். மருத்துவம் என்பது சிரமமானது. மூலகாரணத்தை அறியாமல் சிகிச்சை அளித்தால், விளைவை மட்டுமே நோயாக நினைத்து அந்த தவறான பார்வையில் அந்த வகையான சிகிச்சை அளித்தாலும், நோயை முழுமையாக குணப்படுத்த முடியாது.

உடலை பற்றி தெளிவான புரிதல் இல்லாமல் சிகிச்சை அளிப்பது. புதுப்புது சிக்கல்களை உடலில் உருவாக்கும் மடையை அடைக்காமல் தண்ணீரை தற்காலிகமாக தடுப்பது அதிநவீன அறிவியல்.

உடல் என்பது எல்லையில்லா பிரபஞ்ச பேராற்றலின் அங்கம். மாபெரும் சக்தியை உணராமல் எந்த பிரச்னையையும் முழுமையாக குணமாக்க முடியாது. மருத்துவம் என்பது உணர்வுபூர்வமானது. மனம்தான் 85% நோய்களுக்கு காரணம்.

கடுகைவிட சிறிய விதையே பிரமாண்ட பேராற்றல். அரசமரம்.

நன்றி!

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**செயலாளர் -** த.மி.வா. ஓய்வு பெற்ற தொழிலாளர் சங்கம், **கிருஷ்ணகிரி**

**தோற்றம்**
**03-06-1948**



**மறைவு**
**23-04-2021**

### தெய்வத்திரு. வே. கிருஷ்ணன்

த.மி.வா ஊழியர் / குடும்பத்தினர் உரிமையை பெற்றுத் தருவதும்,
மக்களுக்கு தன்னலமில்லா சேவை புரிவதையும் கொள்கையாய்
கொண்டு வாழ்ந்து மறைந்தவர். நல்லதொரு தந்தையாய்,
எங்களுக்கு ஒரு ஆசானாய், அனைவரையும் வழிநடத்தும்
ஓர் நண்பனாய் இருந்த நீங்கள் மறைந்தது எங்களுக்கு பேரிழப்பு...!

என்றும் உங்கள் நினைவில் வாழும்

மனைவி : **P. சரோஜா –** கிருஷ்ணகிரி, மகன் : **K.S. ரகுபதி - சாந்தி,** சென்னை
மகள் : **K.S. நிர்மலா - செல்வன்,** கிருஷ்ணகிரி,
மகள் : **K. ராஜகுமாரி - கோவிந்தராஜன்,** சென்னை
பேரன், பேத்திகள் : **R. உத்திரா, R. ரோஹித்,**
**K.S. அக்சய காந்தன், K.S. பிரித்திகா**
**M-472, PHASE II, TNHB, Krishnagiri-635 001.**

# ''வேலை இல்லை கூலி இல்லை''

விழித்தெழுங்கள், விழித்தெழுங்கள்
வாரிய பணியாளர்களே
விழித்தெழுங்கள், உயிர்த்தெழுங்கள்
''விழிக்காதவரை விடியாது வாரியம்''
போர்க்களத்திற்கு வெளியில் நின்று
பேசும் பேச்சு வீணாப் போச்சு
களத்தில் இறங்கினால் மட்டுமே
வெற்றி என்பது நிச்சயம் ஆச்சு.

காத்து கிடக்குது போர்க்களம்
காலம் கடத்துதே மனக்குளம்
விரிந்து கிடக்குது வாரியம்
மறந்தா போச்சு போர்க்குணம்

சலுகைகள் பெற்றுத் தந்தால் வாங்குமோ
வேலை நிறுத்தம் என்றால் ஒதுங்குமோ

''வேலை இல்லை, கூலி இல்லை'' இருதினம்
''பயந்து கிடந்தால் கஞ்சி இல்லை'' வரும் தினம்
வாயில் மட்டும் பேச்சு
செயல்தான் என்ன ஆச்சு!
விழுங்க வருகுது முதலைகள்
விலகி நின்றால் நாம் கோழைகள்!

போராடிதான் வந்தது சுதந்திரம்
போராடினால் விடியும் வாரியம்
வேலை நிறுத்தம் புதிதல்ல
புதியதாய் படைப்போம் சரித்திரம்

வளந்திட செய்வோம் வாரியம்
ஒன்றிணைந்தே வெல்வோம் போர்க்களம்
ஆர்ப்பாட்டங்கள் போராட்டங்கள் ஓயுமோ!
விடியல் வாரியம் நம்மிடம்வந்து சேருமோ!

''விடியல் வாரியம் நம்மிடம்
எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் தத்துவம்''

நட்புடன்
**R. சிவப்பிரகாஷ் B.E.**
பொருளாளர், கோவை வடக்கு